Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...




SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA
C/346
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2041 | மார்கழி 23 | வெள்ளிக்கிழமை | (07.01.2011) | பக்கங்கள் 12 | ஓசை – 99

## யாழ்.நகரில் தனியார் கல்வி நிறுவனம் விஷமிகளால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டது





(யாழ்ப்பாணம்)

யாழ்.கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள தனியார் கல்வி நிறுவனமான 'சயன்ஸ் ஹோல்' விஷமிகளால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: நேற்று இரவு சுமார் 8.00 மணியளவில் குறித்த கல்வி நிலையத்தின் கொட்டகைகளுக்குள்ளிருந்து தீ பரவியதை பொதுமக்கள் அவதானித்துள்ளனர். இதனைத் (12ஆம் பக்கம் பார்க்க)

## இளம் பெண்ணைக் கடத்த முயற்சி; துரத்திப் பிடித்தனர் பொலிஸார்!

### குப்பிளானில் நடந்த பரபரப்புச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் பகுதியில் வீடொன்றிற்குள் பலாத்காரமாகப் புகுந்த சிலர் இளம் பெண் ஒருவரைக் கடத்திச் சென்றுள்ளனர்.

எனினும், இக்கடத்தல் நடவடிக்கையை ரோந்து சென்ற பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் அதன் பொறுப்பதிகாரி தலைமையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இந்தவேளையில், முச்சக்கர (11ஆம் பக்கம் பார்க்க)

# புகலிடம் கோரும் இலங்கையர்களை அவுஸ்ரேலியா நாடு கடத்தக்கூடாது!

### ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்துகிறது

(கொழும்பு)

**யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து அவுஸ்ரேலியாவில் புகலிட அந்தஸ்து கோரி அங்கு தங்கியிருக்கும் இலங்கை அகதிகளைப் பலவந்தமாக நாட்டை விட்டு வெளியேற்றக்கூடாது என்று அவுஸ்ரேலிய அரசாங்கத்தை ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.**

இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் அகதிகளாகத் தங்கியிருக்கும் காலத்தில் அந்தந்த நாட்டு அரசுகளால் பல இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டிருக்கின்றனர். இவ்வாறு நாடு கடத்தப்பட்ட பலர் இலங்கையில் கைது செய்யப்படும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இச்சம்பவங்களைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட (11ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகங்களை ஒடுக்க முயலும் அமைச்சரவைப் பத்திரம்தாக்கல்

### ஜனாதிபதி அதை அடியோடு நிராகரித்தார்

(கொழும்பு)

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் சில செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தக் கோரும் அமைச்சரவைப் பத்திரமொன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

கலாசார அமைச்சர் ரி.பி. ஏக்கநாயக்க மேற்படி அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்திருந்தார்.

எனினும், ஊடகங்களை ஒடுக்குவதற்கான அரசாங்கத்தின் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகப் பணிகளைக் கவனிக்க விசேட செயலணி அமைப்பு!

### ஜனாதிபதியின் சிறப்பு ஏற்பாடு



(கொழும்பு)


ஜனாதிபதியின் செயலகத்தில் ஊடகம் தொடர்பான பணிகளைக் கவனிப்பதற்காக விசேட செயலணி ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இச்செயலணியில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சிறிரங்கா ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் ஊடகப்பிரிவின் பணிப்பாளர் நாயகமாக ஊடகவியலாளரும், ராஜதந்திரியுமான பந்துல ஜயசேகர நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, டளஸ் அழகப்பெரும மற்றும் விமல் வீரவன்ச ஆகியோரும் அர சாங்க ஊடகப்பிரிவின் மேற்பார்வையாளராகக் கடமையாற்ற வுள்ளனர்.

இந்தப் பிரிவினர் ஒருவொரு புதன்கிழமைகளிலும் கூடி விடயங்களை ஆராய்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வெள்ளைக் கொடி வழக்கு மீண்டும் சூடு பிடிக்கிறது!



(கொழும்பு)

இலங்கையின் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது எதிர்க்

### அறிக்கை சமர்ப்பிக்க தெரண தொலைக்காட்சிக்கு உத்தரவு

கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா இரத்தினபுரியில் உரையாற்றிய காணொளி அடங்கிய முழுச்செய்தி அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு தெரண தொலைக் காட்சி நிறுவனத் திற்கு கொழு ம்பு மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

வெள்ளைக் கொடி விவகார வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர உள்ளிட்ட மூன்று நீதியரசர்கள் குழு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இவ் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சமயம், ஜனாதிபதித் தேர்தலின் போது இரத்தினபுரியில் சரத் பொன்சேகா கலந்து கொண்ட பரப்புரைக் கூட்டத்திற்கு செய்தி சேகரிக்கச் சென்றிருந்த தெரண பிரதேச (12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் மூன்று பேர் கடத்தல்; பொதுமக்களை விரட்ட துப்பாக்கிச் சூடு

(மன்னார்)

மன்னாரில் நேற்று மட்டும் சில மணி நேர இடைவெளியில் மூன்று பேர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் மர்மமான முறையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

மன்னாரில் நேற்று நண்பகலுக்குப் பின்னர் மாலை 6 மணி வரையில் வெவ்வேறு இடங்களில் மூன்று பேர் ஆயுதம் தரித்தவர்களினால் கடத்தப்பட்டுள்ளதாகப் பொதுமக்களும், உறவினர்களும் தெரிவித்துள்ளனர்.

ஒரு முஸ்லிம் இளைஞன், ஆட்டோ சாரதி ஒருவர் மற்றும் ஒருவர் இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளார்கள்.

மன்னார் தோட்டவெளி பகுதியில் வைத்துக் கமல் என்பவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

மன்னார் பெரியகரைசல் என்ற இடத்தைச் சேர்ந்த ஜகர் அலி ஜலீல் என்ற இளைஞன் மன்னார் காட்டாஸ்பத்திரியில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுளளதாகத் (11ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் இன்று கூடுகிறது தமிழ்க் கட்சிகளின் அரங்கம்

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை கொழும்பு பம்பலப்பிட்டியிலுள்ள புளொட் அமைப்பின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய கீத மொழி தொடர்பான சர்ச்சை, உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் வன்முறைகள் போன்ற விவகாரங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான கலாநிதி என். குமரகுருபரன் தெரிவித்தார்.

# தமிழ்ப்பண்பாடு ஏனையமொழிகளிலும் எழுதப்படவேண்டியது மிக அவசியம்

## அகிலம் எங்கும் தமிழ் பரப்புவோம் என்கிறார் போராசிரியர் கா.சிவத்தம்பி


வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமிழ்ப் பண்பாட்டை ஏனைய மொழி களிலும் எழுத வேண்டும். எனினும் அது நடைபெறுவதில்லை. அதனால் பிரசுர நிலையமொன்றை அமைத்து தமிழைப் பரப்பும் பணிகளில் நாம் ஈடுபட வேண் டும் என தமிழ் அறிஞரான பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறினார்.

இதேவேளை தமிழ் மக்களின் சன சிதறலையும் அனுபவங்களையும் கவி தைகளாகவும் கட்டுரைகளாகவும் இன் றைய எழுத்தாளர்கள் பதிவுசெய்ய வேண டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இன்றைய எழுத்தாளர்கள் தங்களை கம்பனின் வாரிசு, பாரதியாரின் வாரிசு, புதுமைப்பித்தனின் வாரிசு என நினைக்க வேண்டும் என கொழும்பில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமான சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டிற்கான வாழ்த்துரையாற்றும் போது அவர் மேற் காண்டவாறு குறிப்பிட்டார்.

சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு காலை 10 மணிக்கு ஆரம்பமானது. இதன்போது எழுத்தாளர்கள் அனை வரும் வெள்ளவத்தை. காலி வீதியிலி ருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட நிலையில் மாநாடு ஆரம்பமாகியது.

சுனாமி மற்றும் யுத்தத்தால் உயிரி ழந்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர் ந்து, நிகழ்சிகள் ஆரம்ப மான நிலையில் இம் மாநாட்டின் இணைப்பாளர் தி.ஞானசேகரன் வரவேற் புரையாற்றினார்.



அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த தி.ஞான சேகரன்,

"நடந்து முடிந்த யுத் தத்தினால் தமிழ் சிங்கள முஸ்லிம் மக் களிடையே மன விரிசல் ஏற்பட்டுள்ளது. சீர்குலைந்துள்ள உறவை மூன்று இன இலக்கிய வாதிகளும் ஒன்றுகூடி ஆரோக்கிய மான உறவுப் பாலத்தை ஏற்படுத்தி கொடுக்கும் களமாக இம் மாநாடு அமையும்.

கடந்த 30 வருட காலம் இடம்பெற்ற யுத்தம் காரணமாக கலை இலக்கிய முயற்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள் ளது.

போரின் நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்துக் கொண்டு உள்நாட்டில் வாழ்ந்த எழுத்தாளர்களும் புலம் பெயர்ந்த எழுத்தாளர்களும் போரின் அனர்த்தம் பற்றி இலக்கியம் படைத்தனர்.

இலங்கையிலுள்ள கலை இலக்கிய வாதிகள் உலகளாவிய ரீதியில் பரந்து வாழும் கலை இலக்கியவாதிகளோடு இணைத்து பல்வேறு கலை முயற்சி களை சமூகப் பணிகளாக ஆற்றுவதற் கும், வீழ்ச்சியுற்ற மனநிலையிலிருந்து எழுச்சி பெறுவதற்கும் உதவும் என அவர் தெரிவித்தார்.

'அபிநயஷேத்ரா' நடனப்பள்ளி மாணவர்களின் வரவேற்பு நடனமும் இம்மாநாட்டில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மின்வெட்டு

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை 8ஆம் திகதி சனிக் கிமை காலை 8.00 மணிமுதல் மாலை 5 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்விநி யோகம் தடைப்பட்டிருக்குமென யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறி வித்துள்ளார்.

எனினும் வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவும் மின் விநியோகம் வழங் கப்படலாம் என்றும் அவர் அறிவித் துள்ளார்.

## நீரிழிவு தொடர்பான கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்திய சாலை யின் நீரிழிவு சிகிச்சை நிலையம் நடாத் தும் விழிப்புணர்வு கண்காட்சி நாளை 8ஆம் திகதி முதல் 12ஆம் திகதிவரை நல்லூர் நடராசர் பரமேஸ்வரி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிதொடக்கம் மாலை 7.30 மணிவரை இவ் இரு நாட்களிலும் கண்டுகளிக்க முடியும்.

இதில் ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டு கொள்ளப்படுகின்றனர். (05,72, பா)

## வடக்கின் திறைசேரி அடுத்தவாரம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். றக்கா வீதியில் அமைந்துள்ள வடமாகாண திறைசேரி அலுவலகம் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் தமது பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாக அதன் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

இதுவரை காலமும் திருகோணமலையில் இயங்கிவந்த வடமாகாண திறைசேரி, அதன் நிர்வாகப்பகுதியாக வடபகுதிக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் கடந்த வருட இறுதியில் வடமாகாணசபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்படி யாழ். றக்கா வீதியில் திறக்கப்பட்டிருக்கும் வட மாகாண திறைசேரி எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் நமது செயற்பாடுகளை, ஆரம்பிக்கவுள்ளதாக அவ் அதிகாரி தெரிவித் தார்.

இதற்கென் ஒருதொகுதி பணியாளர்கள் ஆவணங்களுடன் இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் 20 கிலோவாற் மின்பிறப்பாக்கி ஒன்றும் இங்கு எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் கணினி மயப்படுத்தப்பட்டுள்ள தமது அலுவல்களின் நிமித்தம் மின்தடை ஏற்படும் வேளைகளில் இது பயன்படுத்தப்படவுள்ள தாகவும் அவ் அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

மேலும் இத்தகைய 20 கிலோவாற் மின்பிறப்பாக்கி ஒன்றும் வடமாகாண நிர்மாணத்திணைக்களத்திற்கும் எடுத்துவரப்பட்டுள்ள தாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாண திறைசேரி அலுவலகம் எதிர்வரும் 19 முதல் இயங்கவுள்ளது. (பா)

## வீதி விபத்து; ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதான வீதியில் பஸ்தியான் சந்திப்பகுதியில் நேற்று பிற்பகல் நடை பெற்ற வீதிவிபத்தில் ஒருவர் படுகாய மடைந்தார்.

கண்டிவீதி வழியாக யாழ். நகர் நோக்கி பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிவந்த மினிபஸ் அதேதிசையில் பொருட்களை சுமந்துசென்ற ஒருவர் மீது கரைப்பக்கமாக மோதியதில் இவ்விபத்து ஏற் பட்டுள்ளது.

இதில் பொருட்களை எடுத்து வந்தவர் வீதியின் கரைப்பக்கமாக வீழ்ந்து தலை யில் படுகாயமடைந்தார். உடன டியாக காயமடைந்தவர் யாழ். போதனாவைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

யூ.குணசிங்கம்,(வயது-51) என்பவரே காயமடைந்தவரா வார். இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (பா)

## விசக்கடிக்கு சிகிச்சை; யாழில் மட்டும் மூவாயிரம் பேர்

(யாழ். நிருபர்)

விஷக்கடிகளுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த ஆண்டில் ஒக்ரோபர் மாதம் வரைக்கும் சுமார் மூவாயிரத்து 52 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதில் விசர்நாய்க்கடிக்கு இரண்டாயிரத்து 659 பேரும், பாம்பு கடிக்கு இலக்காகி 393 பேரும் சிகிச்சை பெற்றிருப்பதாக வைத் தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

விசர்நாய்க்கடிக்கு இலக்கானவர்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி கள் ஏற்றப்பட்டன.

அதனைவிட விஷஜந்துக்களுக்கு இலக்காகி 552 பேர் சிகிச்சை பெற்றதோடு, இதில் சிகிச்சை பயனளிக்காது 17பேர் உயிரிழந்தும் உள்ளனர். அதேசமயம் காய்ச்சலால் பிடிக்கப்பட்டு சுமார் ஆயிரத்து 200 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். (18)

## டெங்கு நோயினை கட்டுப்படுத்த புதிய சிகிச்சை

டெங்கு நோயினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, புதிய முறை யின் கீழ் சிகிச்சைகளை பெற்றுக் கொடுக்கவிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் விசேட வைத்தியர் பிரியங்கர ஜெயவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

நோயை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கு இந்த புதிய முறைமை துணையாக இருக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை சிறுவர்கள் தொடர்பில் முக்கிய அவதானம் செலுத்தப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அறக்கொடை விழா




(யாழ்ப்பாணம்)

கலாநிதி அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர் களின் 86ஆவது பிறந்தநாள் அறக் கொடை விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், ஆசியுரையை ஸ்ரீ துர்கா தேவி தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் வழங்க வுள்ளனர். இந்நிகழ்வில் அருளுரையை அமெரிக்காவைச்சேர்ந்த ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் வழங்கவுள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியர்களான வைத் திய கலாநிதி ஜெயதேவி கணேசமூர்த்தி தம்பதிகள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகம், கௌரவவிருந்தினர்களாக முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் த சிபரானந்தராசா மற்றும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் கி.விசாகரூபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.



ஒரு மனிதன் சுகதேகியாக இருப்பதற்கு நல்ல ஆரோக்கியமான உணவு வேண்டுமென்பதற்காக யாழ் போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையத்தினரின் ஏற்பாட்டில் நீரிழிவை வெற்றி கொள்வோம் என்ற தொனிப் பொருளில் யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிப் பாடசாலையில் இடம்பெற்ற சமையல் போட்டியில் பங்குபற்றிய போட்டியாளர்களையும், உணவு வகைகளையும் படங்களில் காணலாம். (05)

படிப்பு எதற்கு? அறிவு எதற்கு? மனிதன் மனிதத் தன்மையோடு வாழ்ந்து மற்ற மனிதனுக்கு உதவியால்-தொல்லை கொடுக்காதவனாய்-நாணயமாய் வாழ்வதற்குத்தான்.

- தந்தை பெரியார் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## தொடர்கின்றது துரதிர்ஷ்டம்

கொள்ளையர்களுக்குப் பயந்து வீடுகளில் விழித்திருக்கும் நிலைமை தோன்றியுள்ளது. ஐந்து ஆறு வீடுகள் இவ்வாறு விழித்திருக்கும் திட்டத்தில் இணைந்து காவல்காக்கின்றன. இதுபோக, செல்போன்கள் ஊடாக அசம்பாவிதங்கள் தொடர்பான செய்திகளை உடனுக்குடன் பரிமாறிக்கொள்கின்ற விழிப்புணர்வுச் செயற்பாடும் யாழ்ப்பாணத்தில் வழக்கத்துக்கு வருகின்றது.

கொலை, கொள்ளை மலிந்த யாழ். பூமியில் இப்போது வழிப்பறிக் கொள்ளையர்களும் பெருகி வருகின்றனர். மோட்டார் சைக்கிள்களில் ஒருவர் இருவராகப் போவதும், தனியாக வருபவர்களை மிரட்டும் பாணியில் விசாரிப்பதும், கையில் இருப்பதைப் பறிப்பதுமாக சம்பவங்கள் நடந்து வருகின்றன.

இரவு வேளையில் இராணுவத்தினர் வீதிகளில் பரிசோதனைகள் செய்வதாகவும், குறிப்பாக மோட்டார் சைக்கிளில் திரிகின்றவர்களை நிறுத்தி பரிசோதனை செய்தும் வருகின்றனர்.

படையினரின் இந்த சோதனை முயற்சி குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த உதவினால் அது வரவேற்கப்படவேண்டியதுதான். மாறாக, அதுவே மீண்டுமொரு நெருக்கடியாக மாறிவிடக்கூடாது. சிறிது காலம் அடையாள அட்டைக்கு ஓய்வு கொடுத்து சுதந்திரமாக நடமாடிய நிலைமை மாற்றமடைந்து மீண்டும் வீதியில் நடமாடும்போது அடையாள அட்டை கொண்டு செல்லும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால், குற்றச் செயல்களில் ஈடுபடுவோரிடமும் அடையாள அட்டைகள் உண்டு. ஆகவே, அடையாள அட்டைப் பரிசோதனையானது கொலையாளிகளையும், கொள்ளையர்களையும் பிடிக்கும் ஒரு வழிமுறையாகக் கொள்ளமுடியாது.

சமகால சம்பவங்களை ஆராய்ந்து பார்த்தால் கொள்ளையர்கள் அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம் எல்லாம் உடையவர்களாகவே இருந்திருக்கின்றனர். இதுதவிரவும், பதற்றப்படாமல் மிக நிதானமாக குற்றங்களை செய்பவர்களாகவே அதாவது நன்கு கைதேர்ந்த குற்றவாளிகளைப் போல் நடந்துகொண்டுள்ளனர்.

ஆகவே, குற்றச்செயல்கள் இடம்பெறும்போது கையும் களவுமாகப் பிடிபட்டாலன்றி குற்றவாளிகளை விசேடமாக அடையாளங்களைக் கொண்டு கண்டுபிடிப்பது கடினமாகவே இருக்கும்.

யாழ்ப்பாணத்தின் இன்றைய துரதிர்ஷ்டவசமான நிலைகளை ஒரே குரலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஈ.பி.டி.பியும் பேசியிருப்பது அரசைப் பொறுத்தவரை பொறுப்புச் சொல்லும் நிலைமையை மேலும் வலியுறுத்துவதாக நிச்சயம் அமைந்திருக்கும்.

பதில் சொல்வதற்கு கால அவகாசம் தேவை என்று சொல்லுமளவுக்கு நிலைமை விபரீதமடைந்திருப்பதை நாடாளுமன்றத்தில் நடந்த விவாதங்கள் வெளிப்படுத்தியிருந்தன.

யாழ்ப்பாணத்தின் இயல்புச் சூழலை சீர்குலைக்கும் முயற்சி சீராக நடந்துகொண்டிருக்கின்றது. எவர் தலையில் விழப்போகின்றதோ?

-ஆசிரியர்-

# உள்ளூராட்சி மன்றங்கள் சிறப்பாக செயற்பட்டால் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்

(கிளிநொச்சி)

உள்ளூராட்சி அமைப்புக்கள் சிறப்பாகச் செயற்படும் சூழ்நிலை ஏற்படுத்தப்படும்போதே மக்களின் அடிப்படைத் தேவைகள் இலகுவில் பூர்த்தியாகும் என வவுனியா நகரசபைத் தலைவர் நாதன் தெரிவித்தார்.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அபிவிருத்திச் செயற்பாட்டுக் குழுவினருக்கான செயலமர்வு கடந்த திங்கட்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச ரீதியிலான நிர்வாகத்திற்கு இளைஞர்களின் சக்தி என்னும் தலைப்பின் கீழ் நடைபெற்ற இச்செயலமர்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மக்களுக்குரிய அடிப்படைத் தேவைகளையும் சேவைகளையும் வழங்கும் நிறுவனம் உள்ளூராட்சி நிறுவனங்களே ஆகும்.

வசதியும் பொருளாதார வளங்களும் குறைவாக உள்ளபோதிலும் மக்களுக்குரிய சேவையை வழங்கும் ஒரு ஜனநாயக அடிப்படை அரசியல் அலகு உள்ளூராட்சி அமைப்பு ஆகும். இந்த உள்ளூராட்சி அமைப்புக்கள் சிறப்பாகச் செயறபடுத்தப்படும் போதே மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும் நிலைமைகள் ஏற்படுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் சிரேஷ்ட ஆலோசகரும் சட்டத்தரணியுமான எச். ஜி. சி. ஜயதிஸ்ஸ உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகள் சட்டமுறைமைகள், அதிகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவுரையாற்றினார்.

இந் நிகழ்வில் வவுனியா நகரசபையின் முன்னாள் தலைவர் லிங்கநாதன், ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் மற்றும் நகரசபை உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். (29)

## கிராமப்புறங்களில் உள்ள வீடுகளுக்கு மின் விளக்குப் பொருத்தக் கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் உள்ள கிராமப் புற வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்தப்பட வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதியில் உள்ள பருத்தித்துறை, கரவெட்டி பிரதேசங்களின் எல்லைக்குட்பட்ட வீதிளுக்கும், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை நகரசபைகளின் எல்லைக்குட்பட்ட வீதிகளுக்குமே இவ்வாறு மின் விளக்குகள் பொருத்தப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதய சூழ்நிலையில் இரவு நேரங்களில், மக்களின் நடமாட்டம் அதிகரிப்பதால் அவ்வீதிகளில் பயணிக்கும் பாதசாரிகளும் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் செல்வோரும் கும்மிருட்டில் செல்ல வேண்டியிருப்பதாகவும், இதனால் விபத்துக்களைச் சந்திக்க வேண்டியிருப்பதாகவும் கவலை தெரிவிக்கும் மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர். (100)

## சுயதொழில் சங்கங்கள் கிளிநொச்சியில் அமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை ஐந்து தொழில் முயற்சிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தொழில்த்துறைத் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ராகவன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில், இவ்வாறு அமைக்கப்பட்ட 5 கூட்டுறவுச் சங்கங்கள் கூடாக சுமார் 800 பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிக் கண்டாவளை பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலும் இந்தச் சங்கத்தின் கிளைகள் அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் கிளைகள் ஊடாக சிறுதொழில் முயற்சியாளர்களின் வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்கள் இனங்காணப்பட்டு வருவதுடன் சமீபத்தில் இனங்காணப்பட்ட 60 பயனாளிகளுக்கு 25 ஆயிரம் ரூபா வீதம் கடனுதவி வழங்கப்பட்டது.

இதைவிட பிரதேச செயலகங்களில் இயங்கும் தொழில் துறை நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஊடாக தொழில் முயற்சியாளர்கள் தமது தேவைகளைப் பதிவு செய்து கொள்ளமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (28)

# யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் பிறப்புச் சான்றிதழைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் (யாழ். நகர் மேற்கு) பிறப்பு நிகழ்ந்தவர்கள் யாழ் பிரதேச செயலகத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியுமென யாழ் செயலக பதிவாளர் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பிரதேச செயலகங்களுக்கு பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவு நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் திட்டத்தின் கீழ் கடந்த 5ஆம் திகதியில் இருந்து யாழ். பிரதேச செயலகத்திலும் எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தின் பிற்பாடு நல்லூர் பிரதேச செயலகத்திலும் பதிவாளர் திணைக்கள நடவடிக்கைகள் விரிவு படுத்தப்பட்டுள்ளதாக அவ் அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஒன்பது பிரதேச செயலர் பிரிவுகளில் இவ்வாறான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர் நாட்டின் யுத்த சூழல்கள் காரணமாக 2005 ஆம் ஆண்டிற்கு பிறபாடே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். (பா)

## பிரதேச சபை ஊழியர்களுக்கு சட்டம் குறித்த கருத்தரங்கு

(கொக்குவில்)

பிரதேச செயலக ஊழியர்களிடத்தில் சட்டம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக டெனிஸ் அகதிகள் பேரவையினால் நடத்தப்பட்டது. அண்மையில் சங்கானைப் பிரதேச செயலகத்தில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதில் தொழிலாளர் உரிமைச் சட்டம் பற்றி தொழில் திணைக களஉதவி ஆணையாளர் கே.கனகேஸ்வரன் சுற்றாடல் தொடர்பான சட்டங்கள் பற்றி எஸ்.விஜிதா, சுற்றாடல் அதிகாரசபை தேசவளமைச் சட்டம் உறுதிகள் மற்றும் பதிவு தொடர்பாக டெனிஸ் அகதிகள் பேரவை சட்ட அலுவலர் கார்த்திகா ஆகியோர் விளக்க உரைகளை நிகழ்த்தினர். இந்நிகழ்வில் சங்கானைப் பிரதேச செயலக ஊழியர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (54)

## "கீற்று" காலாண்டுச் சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டது

"கீற்று" காலாண்டு சஞ்சிகை வெளியீடு, கடந்த 02 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணியளவில் சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தில் நடைபெற்றது.

பங்குத்தந்தை வண.அ.அகஸ்ரின் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட கோட்ட நிதிப் பொறுப்பாளர் வண.அன்ரனிதாஸ் அடிகளார் கலந்து சிறப்பித்தார்.

சக்கோட்டை பங்கு மக்களின் ஆன்மீக உணர்வுகளை வளர்ப்பதும், அவர்களின் எழுத்தாக்கத் திறனை வெளிக்கொணர்வதும் தனது லட்சியமாகக் கொண்டு செயற்படக் காலடி எடுத்து வைக்கும் 'கீற்று' காலாண்டு சஞ்சிகையின் ஆசிரியராக அல்வாயூர் கே.ஆர்.திருத்துவராசா உள்ளார்.

இந்நூலுக்கான ஆலோசனைகளையும், அனுசரணைகளையும் வண.அ.அகஸ்ரின் அடிகளாரும், ம. வி.இ.ரவிச்சந்திரன் அடிகளாரும் ஆற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்படி நிகழ்வில், பருத்தித்துறை, மிருசுவில், கரவெட்டி பங்குத்தந்தையர்கள் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் கலைநிகழ்ச்சிகளும், 'யாத்திரை' எனும் நாடகமும் நடைபெற்றது. (மா)

## மீண்டும் நியமனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் துரித கல்வி அபிவிருத்தித்திட்டத்தின் கல்வி வாய்ப்பிழந்த மாணவர்களுக்கு அந்த வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் 137 ஆசிரியர்களுக்கு மீண்டும் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட வலயக் கல்விப் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

நியமனம் பெற்ற இந்த 137 ஆசிரியர்களும் ஏற்கனவே முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளில் கடமையாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## விபரங்களைத் திரட்டப் பணிப்பு

உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழுள்ள சகல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுநூலகம், முன்பள்ளி, மற்றும் பராமரிப்பு நிலையங்களின் விபரங்களைத் திரட்டுமாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி. ஜோன்சன் கேட்டுள்ளார்.

உள்ளூராட்சித் திணைக்களத்தின் பிராந்திய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தரவுகளைச் சேகரிக்குமாறு அனைத்து பிரதேச சபைகளுக்கும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து 94 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

**வலிகாமம் கல்வி வலயத்தில் கடமையாற்றிய 94 ஆசிரியர்கள் வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். வட மாகாண கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக வட மாகாண மாவட் டங்களுக்கு இடையேயான ஆசிரியர்களின் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

இந்த இடமாற்றத்திற்கு அமைவாக வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளிலிருந்து 31 ஆசிரியர்கள் ஏனைய மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ள போதிலும், 43 ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களில் இருந்து இடமாற்றம் பெற்று வலிகாமம் கல்வி வலயத்தில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

இந்நிலையில் 45 வயதிற்கு உட்பட்ட வெளி மாவட்டங்களில் தமது சேவைகளை மேற்கொள்ளாத ஆசிரியர்களில் மேலும் 63 பேர் வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு இரண்டாம் கட்டமாக இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இதேவேளை யாழ் மாவட்ட கல்வி வலயங்களுக்கு இடையேயான இடமாற்றம் இடம் பெற்றுள்ளதுடன், வலயங்களுக்கு உட்பட்ட கோட்டங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு இடையேயான இடமாற்றமும் வலிகாமம் கல்வி வலயத்தில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.





அகில இலங்கை சைவப்புலவர் சங்கப் பொன்விழாச் சைவ மகாநாடு அண்மையில் சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தம் பிள்ளையின் தலைமையில் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றிருந்தவேளை, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் உரையாற்றுவதையும், ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வருடன் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், சங்கத்தால் பொன்னாடை போர்த்தி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பௌராணிகர் சிவசண்முகவடிவேல் உரையாற்றுவதையும் காணலாம். (06)

## விலாசம் விசாரித்தவர்கள் ஆட்டைத் திருடிச் சென்றனர்

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குழி - பாண்டியன்தாழ்வு வீதியில் ஒருவரின் வீட்டை விசாரித்த இளைஞர்கள் அங்கு மேய்ச்சலுக்குக் கட்டியிருந்த ஆட்டைத் திருடிச் சென்ற சம்பவமொன்று இடம்பெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

சுண்டுக்குழி - பாண்டியன்தாழ்வு சந்தன மாதா வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்கள், குறித்த நபர் ஒருவரின் பெயரைக்கூறி விசாரித்தனர்.

ஆனால், அப்பகுதியிலுள்ளவர்கள் அந்தப் பெயர் உடையவரைத் தெரியாது எனக் கூறவே, திரும்பிச் சென்ற மேற்படி இரண்டு இளைஞர்களும் அங்கு மேய்ச்சலுக்குக் கட்டி நின்ற 15000 ரூபா பெறுமதியான ஆட்டைத் திருடிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (52)

## புதிய செயலாளர் நியமனம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேசசபை செயலாளராக கடந்த முதலாம் திகதி முதல் எஸ். சுதர்சன் வட மாகாண ஆளுநர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே ஊர்காவற்றுறை பிரதேசசபைச் செயலாளராகக் கடமையாற்றி வந்த ஏ. கணேசானந்தராசா அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளமையை அடுத்து, ஊர்காவற்றுறைப் பிரதேசசபைச் செயலாளராக எஸ். சுதர்சன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். (பா)

## சாதாரணதர விடைத்தாள்கள் 3 பாடசாலைகளில் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

நடைபெற்ற க. பொ. த சாதாரணதரப் பரீட்சையின் யாழ் மாவடட பரீட்சார்த்திகளின் விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் யாழ். மாவட்டத்தில் மூன்று பாடசாலைகளில் நடைபெற்று வருவதாக வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். மத்திய கல்லூரி, வேமபடி மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இவ்விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ் விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 9 ஆம் திகதி முடிவடையவுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், இப்பாடசாலைகள் 10 ஆம் திகதி ஆரமபமாகும் எனவும் தெரிவித்தார். (பா)

## குடாநாட்டிலுள்ள வர்த்தக நிலையங்களில் அதிகரித்த விலையில் கற்றல் உபகரணங்கள்

(யாழ் நிருபர்)

யாழ். குடாநாட்டிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் காகிதாதிகள், மாணவர்களின் கற்றல் உபகரணங்கள் அதிகரித்த விலைக்கு விற்கப்படுகின்றன.

ஒவ்வொரு நிலையங்களிலும் இடத்திற்கிடம் வேறுபட்ட விலையில் இவை விற்கப்படுவதால் வசதி குறைந்த மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அப்பியாச கொப்பிகளின் தரங்களுக்கு ஏற்ப அவை கூடிய விலையில் விற்கப்படுகின்றன. குறிப்பாக 20 ஒற்றை றூள் கொப்பி ஒரு புத்தகசாலையில் 15 ரூபாவாகவும், மற்றைய கடையில் 20 ரூபாவாகவும் விற்கப்படுகின்றது. இவ்வாறு இடத்திற்கிடம் வேறுபட்ட விலையிலும் வறுமை நிலையிலுள்ள மாணவர்கள் வயிற்றில் அடிக்கும் வகையில் அதிகரித்து விற்கப்படுகின்றன. கல்விக்காக பெரும்பாடுபட்டு அதிக பணத்தைச் செலவழிக்கும் நிலைக்கு குடாநாட்டு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். (18)

## வகுப்புகள் ஆரம்பம்

(தும்பளை)

தும்பளை தெற்கு, திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்டு, சிறிது தடைப்பட்டிருந்த அனைத்து மாணவர்களுக்குமான கல்வியூட்டல் வகுப்புகள் மீண்டும் புதுவருடத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வகுப்புகள் அதிகாலை 5.00 மணிக்கு ஆரம்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (மா)

## சமாதான நீதிவான்கள்



ஆறுமுகம் சாந்தலிங்கம் கடந்த 20.08.2010 அன்று நீதிபதி அ.பிறேம்சங்கர் முன்னிலையில் யாழ். மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தீவக அரிமாக்கழகத்தின் தலைவரும், கொய்யாத் தோட்ட ஞானசெல்வ விநாயகர் தேவஸ்தான பொருளாளரும், புங்குடுதீவு பெரியபுலம் வீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாக சபை உறுப்பினரும், அன்னதான சபைத் தலைவரும், ஏழாலை வசந்த நாகபூசணி அம்பாள் ஆலயத் தொண்டரும், பாண்டியந்தாழ்வு நரசிம்ம வைரவர் ஆலய உபதலைவரும், புங்குடுதீவு சித்திவிநாயக வித்தியாலய பழைய மாணவர் சங்க உறுப்பினருமாவார்.

(அச்சுவேலி)



யாழ்ப்பாணம் பாசையூரைச் சேர்ந்த திரு.நீக்லஸ் பிரபாகரன் அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி அ.பிறேம்சங்கர் முன்னிலையில் யாழ்ப்பாண நீதி மற்றும் நிர்வாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் வர்த்தகப் பட்டதாரியான இவர், முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் உதவி மாவட்டப் பதிவாளராகக் கடமையாற்றி வருவதுடன், யாழ்ப்பாணப் பிரதேச செயலக மத்தியஸ்தர் சபையின் உறுப்பினராகவும் இலங்கை சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் நிறுவனத்தின் உறுப்பினராகவும் இருப்பதுடன், பல்வேறு சமூக, சமய சேவைகளையும் மக்களுக்காக ஆற்றி வரும் ஒரு மக்கள் சேவகரும் ஆவார். (03)

## மக்கள் மீது கரிசனையற்ற ஒப்பந்த நிறுவனங்கள்

(அச்சுவேலி)

கோப்பாய் மற்றும் நீர்வேலிப் பகுதிகளில் யாழ் - பருத்தித்துறை பிரதான வீதியின் திருத்தியமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் ஒப்பந்த நிறுவனங்கள் பொது மக்கள் மீது அக்கறை அற்ற விதத்தில் செயறபட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கினறனர்.

கோப்பாய் பிரதேச செயலகத்தை அண்டிய பகுதி மற்றும் நீர்வேலிப் பகுதிகளில் வீதிகளை திருத்தியமைப்பதற்காக கிளறப்பட்ட வீதிப்பகுதிகள் நீண்ட நாட்களாகியும் செப்பனிடப்படாதுள்ளதுடன், வீதி திருத்தப்பணிக்காகக் கொட்டப்பட்ட கற்கள் வீதி எங்கும் பரவியும் காணப்படுகின்றது.

இதனால் வாகனங்கள் பயணிப்பதில் பெரும் கஷ்ட நிலை காணப்படுகின்றது. மேலும் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களில் செல்வோர் வீதியில் உள்ள கற்களின் மீது இடர்பட்டு பிரயாணம் செய்வதையும் சிலவேளைகளில் சறுக்கி வீழ்ந்து காயப்படுவதனையும் காணமுடிகின்றது.

பொதுமக்களுக்கும் தீங்கான முறையில் இந்நிறுவனங்கள் செயற்பட்டு வரும் விதம் மக்களுக்குப் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தி வருவதால், உரியவர்கள் இந்நிறுவன நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய வேண்டும் எனவும் அவ் வீதியால் பயணம் செய்வோர் தெரிவித்தனர். (03)

## நிர்வாக சேவை அதிகாரிகளை தெரிவுசெய்யப் போட்டிப் பரீட்சை

(நமது நிருபர்)

வடக்குக் கிழக்கில் தமிழில் பணியாற்றக் கூடிய் வகையில் நிர்வாக சேவை அதிகாரிகளைத் தெரிவு செய்யும் நோக்குடன் தனியான போட்டிப் பரீட்சை ஒன்றை நடத்தி அதன் மூலம் வடக்குக் கிழக்கில் இருந்து தெரிவு செய்வதற்கு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுத் தீர்மானித்துள்ளதாக அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு , கிழக்கு மாகாணங்களில் நிலவும் நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்பும் துாித நடவடிக்கையாகவே அமைச்சு இத் தீர்மானத்தை எடுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில்-

ஏற்கனவே நிர்வாகசேவை அதிகாரிகளைத் தெரிவு செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டபோதும், அதில் தெரிவு செய்யப்பட்டவர்கள் தமிழ்மொழியில் கரும மாற்றக் கூடியவராகக் காணப்படவிலலை.

இதனால் தமிழ் மக்களின் நலன்கருதி, தமிழ்மொழியில் கருமமாற்றக்கூடிய நிர்வாக சேவை அதிகாரிகள் தெரிவு செய்யப்படவேண்டும் என்ற அரசின் தீர்மானத்துக்கு அமைவாகவே மேற்படி போட்டிப் பரீட்சையை நடத்தத் தீர்மானித்துள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (வி)

# பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளமையே குற்றச் செயல்கள் குறையக் காரணமாகும்


## வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

(வவுனியா)

வவுனியா நகரில் பாதுகாப்பு மிகவும் உச்சக்கட்டமாக இருப்பதன் காரணமாகவே குற்றச்செயல்கள் வெகுவாகக் குறைந்துள்ளது என வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமரசிறி சேனாரத்தின தெரிவித்தார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட புதுவருட ஒன்றுகூடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வாண்டு குற்றச்செயல்கள், மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் பாவனையை 50 சதவீதத்தினாலும் வீதி விபத்துக்களை 99 சதவீதத்தினாலும் வவுனியா மாவட்டத்தில் குறைப்பது எமது செயற்திட்டமாகும். குற்றச்செயல்களை எவ்வாறு தடுப்பது என்பது பற்றிய விளம்பரங்கள் எம்மால் செய்யப்படுகின்றன.



அதனை மக்கள் பின்பற்றி பொலிஸாருக்குத் தகவல்களை வழங்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டதுடன் அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் மக்களுக்கு நாம் என்றும் துணையாக இருப்போம் எனவும் தெரிவித்தார்.

நகரபிதா ஜி.நாதன், சபை எதிர்க்கட்சித் தலைவர் ரி.லிங்கநாதன்,உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.அச்சுதன், நகரசபை உறுப்பினர்களான எம்.முகுந்தரதன், எஸ்.குமாரசாமி, எம்.கே.முனாபர்,சபைச் செயலாளர் எஸ்.வசந்தகுமார் உள்ளிட்ட அனைத்து நகரசபைப பணியாளர்களும் இந்த ஒன்றுகூடலில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தூர போக்குவரவு சேவையில் ஒழுங்கற்ற நடைமுறைகள் எனவிசனம்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து மேற்கொள்ளப்படும் நெடுந்தூர பேருந்துச் சேவைகளில் ஒழுங்கற்ற நடைமுறைகள் பின்பற்றப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு,அம்பாறை போன்ற இடங்களுக்கு இரவுச் சேவையில ஈடுபடும் பேருந்துகளில் பயணிகளுக்கான ஆசனங்கள் பதிவு செய்யப்படுவதனால் பதிவு செய்யாது வரும் பயணிகளும் புதிதாக வரும் பயணிகளும் பயணத்தைத் தொடரமுடியாது திரும்பிச்செல்வதுடன் பல்வேறு சிரமங்களையும் எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கல்முனைச் சாலைக்குரிய பேருந்தில் வவுனியாவிலுள்ள பயணி ஒருவருக்கு யாழ்ப்பாணத்திலே ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தமையை பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே பொதுமக்களின் நலன்கருதி சேவையில் ஈடுபடும இலங்கைப் போக்கு வரத்து சபைக்கான பேருந்துகளில் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொள்வதுடன் நெடுந்தூர சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் சீரான நடைமுறைகள் அமுல்படுத்தப்படவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (69)

# விதை வெங்காயத்திற்கு குடாநாட்டில் தட்டுப்பாடு

(யாழ்.நிருபர்)

யாழ்.குடாநாட்டில் வெங்காயச் செய்கையை மேற்கொள்வதற்கு விதை வெங்காயம் இன்றி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கையிருப்பில் இருந்த வெங்காயத்தை விவசாயிகள் தற்போது தரும் பணியில் மும்மரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வலி.கிழக்கு, வலிமேற்கு, வலிதென்மேற்கு போன்ற பகுதிகளில் இந்த வெங்காயச் செய்கை மும்மரமாக இடம்பெற்று வருகின்றன.

விதை வெங்காயத்தின் விலை உச்சத்தில் எகிறி இருப்பதால் வெங்காயச் செய்கையை மெற்கொள்வதற்கு விவசாயிகள் பின்னடித்து வருகின்றனர்.

இந்த விதை வெங்காயம் அந்தர் 8 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை விற்கப்படுகின்றன.

சந்தைகளில் இந்த விதை வெங்காயம் கிலோ 200 ரூபா வரை விற்கப்படுகின்றன. (18)

# நிதி ஒதுக்கீடு

(நமது நிருபர்)

நாட்டில் உள்ள சர்வமதவழிபாட்டுத் தலங்களையும் அபிவிருத்திசெய்யும் திட்டத்தின் கீழ் 327 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நிதி ஒதுக்கீடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் பிரதமர் டி.எம்.ஜெயரட்ண தெரிவித்தார்.

பௌத்த சாசன மதவிவகார அமைச்சின் நிர்வாகத்தில் உள்ள பௌத்த,ஹிந்து,முஸ்லிம், கிறிஸ்தவ திணைக்களங்கள் மூலம் இந்த அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இந்து மதவழிபாட்டுத் தலங்களுக்கு 181 லட்ச ரூபாவும் முஸ்லிம் மத வழிபாட்டுத் தலங்களுக்கு 40 லட்ச ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

# வரி அனுமதிப்பத்திரத்தை பெற நீண்ட வரிசையில் நிற்கும் மக்கள்

(அச்சுவேலி)

இந்த வருடத்திற்கான வாகனங்களுக்குரிய வரி மற்றும் காப்புறுதிப் பத்திரங்களை பெறுவதற்காக வாகன உரிமையாளர்கள் பிரதேச செயலகங்கள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களில் நீண்ட வரிசையில் நெடுநேரமாகக் காத்திருந்ததைக கடந்த நாட்களில் காணக்கூடியதாக இருந்தது.

குறிப்பாக கோப்பாய்,கரவெட்டி,யாழ்ப்பாணம்,சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களில் இவ்வருடத்திற்கான வரிப் பத்திரத்தைப் பெறுவதற்காகவும் நெல்லியடி மற்றும் யாழ்ப்பாணப் பகுதிகளிலுள்ள இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும் பலநூற்றுக் கணக்கானோர் காலை வேளையில் இருந்து நீண்ட வரிசையில் காத்திருந்ததைக் காணமுடிந்தது.

தற்போது போக்குவரத்து கண்காணிப்பு பொலிசாரின் வீதிப் பரிசோதனை நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதை அடுத்தே வருட ஆரம்ப நாட்களிலேயே மக்கள் பிரதேச செயலகங்கள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களில் இவ்வாறு அதிகளவில் காணப்படுகின்றனர். (03)


# தொலைபேசி ஒலித்ததால் அபராதம் செலுத்திய வழக்காளி

(மன்னார்)

மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்காகச் சென்ற ஒருவரின் கையடக்கத் தொலைபேசி நீதிமன்றத்தினுள் ஒலித்ததனால் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டு அபராதம் பெறப்பட்ட நிலையில் விடுதலையானார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மன்னார்ப் பகுதியில் கடந்த 2008 ஆம் ஆண்டு இரண்டு சிறுவர்கள் கிணற்றுக்குள் வீசப்பட்ட சம்பவம் தொடர்பாகக் குறித்த நபர் வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்திற்குச் சென்று வருவது வழக்கம். குறித்த நபரிடம் கடந்த திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அவரது கையடக்கத் தொலைபேசி ஒலித்தது. இந்நிலையில், நீதிமன்றத்தில் கையடக்கத் தொலைபேசி ஒலித்ததால் தண்டப்பணமாக ஆயிரம் ரூபா செலுத்துமாறு மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிவான் திருமதி கே.ஜீவராணி உத்தர விட்டார். இதனையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்ட நிலையில் அபராதம் செலுத்திய பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.



வலிதென்மேற்கு பிரதேச சபையின் கடந்த வருடத்திற்கான உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வும்,பரிசளிப்பு விழாவும் கடந்த 30 ஆம் திகதி நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உள்ளூராட்சி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார் உள்ளிட்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (54)

## இன்றைய பலன்

(07.01.2011 வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புகள்**

விகிர்தி மார்கழி 23 இராகு காலம் 11.02-12.32, சுபநேரம் 6.32-8.02,

திருவோணம் காலை 7.40 வரை திருதியை மரணயோகம் மாலை 6.21 வரை

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

-ஆதினி-

மேடம்:- அமைதிப்போக்கு,ஆன்மீகவிருப்பு,ஆலயதரிசனம்.

ரிஷபம்:-முயற்சிபலிதம்,உறவினர் உதவி,மங்கல காரியம்.

மிதுனம் :-மனஸ்தாபம், விதண்டாவாதம்,பொருள் இழப்பு.

கடகம்:-துணிவானமுடிவு,பணவரவு,வெளிநாட்டு உதவி.

சிம்மம்:-நினைத்த காரியசித்தி, புதிய முயற்சி, பொருள்வரவு.

கன்னி :-உடல் நலம்பாதிப்பு, பொருள் இழப்பு,அதிகசெலவு.

துலாம் :-காரியசித்தி,பணவரவு, வெளிநாட்டு உதவி.

விருச்சிகம்:-ஆரோக்கியம், பெரியோரால் மதிக்கப்படல்,பணவரவு.

தனுசு :-காரிய விக்கினம், பொருள் இழப்பு,வாக்குவாதம்.


மகரம் :-மதிப்பு உயரல்,மேலதிகாரி பாராட்டு,மகிழ்ச்சிப்பெருக்கு.

கும்பம் :-பெரியோர் உதவி,வழக்கில் வெற்றி,பொருள்வரவு.

மீனம்:-நீண்ட பயணம்,பொருள் இழப்பு,திருடர்பயம்.

# பாதுகாப்புச் செயலர் இஸ்ரேல் பயணம்

(கொழும்பு)



இலங்கைப் படைகளுக்கு பிந்திய தொழில் நுட்ப ஆயுதங்களை வாங்குவது குறித்து ஆராய வதற்காக பாதுகாப்புச் செயலர் கோத்பாய ராஜபக்ஷ இஸ்ரேலுக்குப் பயணம் மேற்கொள் ளவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இஸ்ரேலுக்குச் செல்லும் கோத்தபாய ராஜபக்ஷ அங்கு ஒருவார காலம் தங்கியிருப்பார் என்றும் கூறப்படுகிறது. அவருடன் பாதுகாப்பு அதிகாரிகளைக் கொண்ட குழு வொன்றும் இஸ்ரேலுக்குப் பயணமாகவுள்ளது. அண்மைக்காலமாக இலங்கை அரசாங்கம் இஸ்ரேலுடனான உறவுகளைப் பலப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே,போர் முடிவுக்குவந்துள்ள நிலையில் படையின ருக்கான ஆயுதக்கொள்வனவுக்கு பணத்தைச் செலவிடுவது குறித்து அமைச்சர்கள் மட்டத்தில் அதிருப்தி நிலவுவதாகவும் கூறப்படுகிறது.

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவப்பயிற்சி அளிக்கப்படவுள்ளது

## உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

***இலங்கையில் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றுக் கொள்ளும் சகல மாணவர்களுக்கும் அடுத்த ஆண்டு முதல் இராணுவ முகாம்களில் பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்தார்.***

இதன்படி பல்கலைக்கழ கத்தில் உள்ள சகல மாணவர் களுக்கும் மூன்று வார காலம் இராணுவ முகாம்களில் பயிற்சி அளிக்கப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

• இராணுவ முகாம்களில் வழங்கப்படும் இந்தத் தலை மைத்துவப் பயிற்சிகளை இராணுவப் பயிற்சியாகக் கருதக் கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


மாணவ மாணவியரின் திறமைகளை விருத்தி செய்யும் நோக்கிலேயே இந்த நட வடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு மேலதிகமாக



பல்கலைக்கழக மாணவர் களுக்கு இந்த ஆண்டு முதல் கணனி மற்றும் ஆங்கிலப் பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோத ஆட்கடத்தல்களை தடுத்துநிறுத்த நடவடிக்கை



(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை முற்று முழுதாகத் தடுத்து நிறுத்து வதற்கு நடவடிக்கை எடுக் கப்படுமென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரி வித்தார்.

சட்டவிரோத குடியேற்றக் காரர்கள் தொடர்பாக நடை பெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொண்டபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித் ததாவது,

சட்டவிரோத ஆட்கடத்தல் மற்றும் சட்டவிரோத குடியேற் றங்களைத் தடுத்து நிறுத்து வதற்கு சில நாடுகளுடன் இணைந்து இலங்கை அர சாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. சட்டவிரோத ஆட் கடத்தல்களின் மூலம் பெரும் பாலான மக்கள் பல்வேறு துயரங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே சட்டவிரோத ஆட் கடத்தல்காரர்கள். மத்திய நிலையங்களாகப் பயன்படுத் தும் நாடுகளின் ஒத்துழைப்புடன் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

அண்மையில் கனடாவில் புகலிடம் கோரிய இலங்கை கப்பல் பயணிகள் மத்தியில் விடுதலைப்புலி உறுப்பினர் களும் அடங்குவதாக அறிக்கை கள் வெளியாகி உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பதிவு செய்யப்படாமல் இயங்கும் சிறுவர் இல்லங்களுக்கு மூடுவிழா

(கொழும்பு)

பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்களை சிறுவர் பாது காப்புத் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறு பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்கள் மூடப் பட்டு அதில் உள்ள சிறுவர்களுக்கு வேறு வழிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமென அந்தத் திணைக்களம் தெரிவித்தது.

அத்துடன் சிறுவர்கள் நிறுவனமயமாக்கப்படுவதை தடுப்பதற்கு, சிறுவர்களை அவர்களுடைய உறவினர் பெற்றோரிடம் ஒப் படைக்கும் விதத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

# உயர்தர வினாத்தாள்கள் குறித்து நிபுணர் குழு ஆராயவுள்ளது

(நமது. நிருபர்)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை வினாக்கள் கடினமாக உள்ளதா? அவற்றை இலகு படுத்த வேண்டுமா? என் பது குறித்து ஆராய நிபுணர்கள் குழுவொன்றை நியமிக்கவுள்ள தாக பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க கூறினார்.

தற்போதுள்ள முறைப்படி வினாத்தாள்கள் மாணவர் களுக்கு ஏற்றதாக இல்லை என வும்,இதனால் மாணவர்களின் மனநிலை பாதிக்கப்படுவதா கவும்,மனநல நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளதையடுத்தே இந்நிபுணர்கள் குழு நியமிக் கப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாடவிதானத்துக்கு ஏற்ப மாணவர்களுக்கு உகந்ததான வினாத்தாள்களைத் தயாரிப்பது குறித்து பரீட்சைத் திணைக் களம் கவனம் செலுத்தி வருவ தால்,நிபுணத்துவ குழுவின் சிபார்சின் பிரகாரம் இது தொடர்பாக இறுதி முடிவு எடுக் கப்படவுள்ளதாகவும், இது தொடர்பாக மகரகம தேசிய கல்வி நிறுவகம் மற்றும் பரீட் சைத்திணைக்களம் என்பவற் றுடன் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன பேச்சு நடத்தி யுள்ளதாகவும் அமைச்சுத் தெரிவித்துள்ளது.

# ஆணைக்குழுவின் அழைப்பு கிடைக்கவில்லையெனத்தெரிவிப்பு

(கொழும்பு)


முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு உண்மை யைக் கண்டறியும் ஆணைக் குழு அழைப்பு எதனையும் விடுக்கவில்லை எனத் தெரிவிக் கப்படுகிறது. முன்னாள் ஜனா திபதி சந்திரிக்காவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள் ளதாக உண்மையைக் கண்ட றியும் ஆணைக்குழுவின் செய லாளர் எஸ்.பி அத்துகொட அண்மையில் தகவல் வெளி யிட்டிருந்தார்.

எவ்வாறெனினும் இவ்வா



றான அழைப்புக்கள் எதுவும் விடுக்கப்படவில்லை என முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங் கவின் அலுவலகம் அறிவித் துள்ளது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவிற்கு உத்தி யோகபூர்வமாகக் கடிமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதா கவும் இதுவரையில் பதில் எது வும் கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும். இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள் வதும் நிராகரிப்பதும் முன்னாள் ஜனாதிபதியின் கைகளில் தங்கிள்ளதென ஆணைக் குழு வின் செயலாளர் அத்து கொட தெரிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

# உள்ளூராட்சித் தேர்தலில் ஜே.வி.பி தனித்துப் போட்டி



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது தனி யாகப் போட்டியிடத் தீர்மானித் துள்ளதாக ஜே.வி.பி தெரிவித்தது.

கொழும்பில் நேற்று (06.01. 11)இடம்பெற்ற ஊடகவிய லாளர்களுடனான சந்திப்பின் போது கட்சியின் பொதுச்செய லாளர் ரில்வின் சில்வா இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை இம்முறை வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களிலும் ஜே.வி.பி தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

தேர்தலில் தமது கட்சி தனித்துப்போட்டியிடுவது குறித்த தீர்மானத்தை ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத்பொன்சேகாவிடம் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிடடார். இதேவேளை இம்முறை மணி சின்னத்தில் தமது கட்சி போட்டியிடவுள்ளதாக கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார். கடந்த வருடம் நடைபெற்ற தேர்தலில் கிண்ணம் சின்னத்தில் ஜே.வி.பி போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# 350 வெளிநாட்டுப் பிரஜைகள் இலங்கையில் அரசியல் தஞ்சம்

(கொழும்பு)

அரசியல் தஞ்சம் மற்றும் புகலிடம் கோரி 350 க்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பிரஜைகள் இலங்கைக்குள் பிரவேசித்திருப்பதாக சிங்கள ஊடகமொன்று குறிப்பிட்டுள்ளது.

சுற்றுலா விசாக்களின் மூலம் இவர்கள் நாட்டுக்குள் பிரவேசித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை, நாட்டுக்குள் பிரவேசித்த 216 வெளிநாட்டுப் பிரஜைகள் ஐக்கிய நாடுகள் காரியாயலத்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாகவும், இதில் பலர் தனியார் நிறுவனங்களில் பணியாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

# ஆராய்ச்சி செய்ய வந்தவர் செலுத்தினார் அபராதம்

(கொழும்பு)

நீர் மாசுபாடு குறித்து ஆராய்ச்சி செய்வதற்காக பெய்ரா ஏரியில் இருந்து நீர் மாதிரி களை சேகரித்த தமிழர் ஒரு வருக்கு கொழும்பு நீதி மன்றம் 5000ரூபா அபராதம் விதித் துள்ளது.

பிரித்தானியா, இலங்கை இரட்டைக் குடியுரிமை பெற்ற வரும் லண்டனில் வசிப்பவருமான சஞ்சய் ரவீந்திரன் என்ற இளை ஞர் கடந்தவாரம் பொலிஸாரால செய்யப்பட்டிருந்தார்.

உயர்பாதுகாப்பு வலயத்துக் குள் அமைந்துள்ள பெய்ரா ஏரி யில் இருந்து பட்டமேற் படிப் புக்கான ஆராய்ச்சிக்காக எட்டு நீர்க் குடுவைகளில் மாதிரி நீரைச் சேகரித்துக் கொண்டிருந்த போதே அவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேக நபரான சஞ்சய் ரவீந்திரன் சார்பில் முன்னிலை யான சட்டத்தரணி, பெய்ரா ஏரிப் பகுதியில் காவலில் இருந்த இரண்டு பொலிஸாரின் அனுமதி பெற்ற பின்னரே அங்கு சென்றதாக கூறினார்.

அத்துடன், நீர் மாசுபாடு குறித்த ஆராய்ச்சிக்காகவே அவர் கொழும்பு வந்தாகவும் கூறினார்.

இதையடுத்து சந்தேகநபரை யும் அவரது கடவுச்சீட்டையும் விடுவிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைந்த குற்றத்துக்காக 5000 ரூபா அப ராதமாகச் செலுத்துமாறும் உத்தரவிட்டார்

# விளையாட்டுத்துறை அலுவலர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் விளையாட்டுத் துறைக்கென 3 விளையாட்டுத்துறை அலுவலர்கள் புதிதாக நியமனம் பெற்றுள்ளதாக கிளிநொச்சி மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் கரப்பந்து, வலைப் பந்து, மெய்வல்லுநர் போன்ற விளையாட்டுகளுக்கே இந்த மூவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் கரப்பந்திற்கு எஸ். சதீஸ்குமாரும், வலைப்பந்திற்கு எஸ்.அருள்நேசனும், மெய்வல்லுநர் துறைக்கு என்.முகுந்தனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளின் ஒழுங்கமைப்புக்குக் கூட விளையாட்டுத்துறை அலுவலர்கள் இல்லாதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இதுவரை காலமும் பூநகரி பிரதேச செயலக அலுவலகத்திற்கு கலாசார உத்தியோகத்தர் இல்லாது இருந்ததை அடுத்து புதிதாக கலாசார உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் திருமதி ரஜனி நாகேந்திரா என்பவரே கடந்த 3 ஆம் திகதியன்று புதிதாக நியமிக்கப்பட்டவர் என மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.(28)

# வெள்ள நிவாரணப் பணிக்காக முதலாவது ஒருநாள் போட்டி நிதி

(பிரிஸ்பேன்)

அவுஸ்ரேலிய, இங்கிலாந்து அணிகளிடையே நடைபெற்று வரும் ஆஷஸ் டெஸ்ட் தொடர் இன்றுடன் நிறைவு பெறுவதை அடுத்து, இரு அணிகளுக்குமிடையிலான ஒரு நாள் தொடர் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதன்படி இரு அணிகளுக்குமிடையே எதிர்வரும் 30 ஆம் திகதி பிரிஸ்பேன் மைதானத்தில் ஒருநாள் போட்டி நடைபெறவுள்ளது. இந்த ஒருநாள் போட்டியைப் பார்வையிடுவதற்கென விற்பனையாகும் டிக்கெட் பணம் முழுவதும், அவுஸ்ரேலியாவின் குயின்ஸ்லாந்து மற்றும் நியூ சவுத்வேல்ஸ் மாகாணத்தின் வெள்ள நிவாரண நிதிக்கு வழங்கப்படவுள்ளது.

அவுஸ்ரேலியாவில் அண்மையில் பெய்த கனமழை காரணமாக வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு அந்த நாட்டில் ஏற்பட்டதுடன், பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நடுவரின் முடிவிற்கு எதிர்ப்பு 50 வீதம் அபராதம் விதிப்பு

(கேப்டவுண்)



நடுவரின் முடிவிற்கு எதிர்ப்பை வெளிப்படுத்திய இந்திய பந்து வீச்சாளர்களில் ஒருவரான சிறிசாந்திற்கு, ஐம்பது வீத அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய-தென்னாபிரிக்க அணிகளிடையே கேப்டவுனில் இடம்பெற்ற மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில், தென்னாபிரிக்க வீரர்கள் இருவரின் ஆட்டமிழப்புத் தொடர்பாகப் பந்து வீச்சாளர் சிறிசாந்த் நடுவரிடம் எல்.பி.டபிள்யூ முறையீடு செய்தார்.

ஆனால் அவரின் இந்த முறையீட்டை ஏற்காத நடுவர், ஆட்டமிழப்பையும் அறிவிக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த சிறிசாந்த், நடுவரின் முடிவை எதிர்க்கும் வகையில் அடுத்த ஓவரில் எல்லைக் கோட்டுக் கயிறை காலால் உதைத்தார்.

சிறிசாந்தின் இந்தச் செயல் வீரர்களின் நடத்தை விதியை மீறிய செயலெனக் கணிக்கப்பட்டது. இதனையடுத்து போட்டியிலிருந்து கிடைக்கும் பணத்தில் ஐம்பது சதவீதம் அவருக்கு அபராதமாக விதிக்கப்பட்டது.

இந்திய வீரர்களில் அடிக்கடி சர்ச்சைக்குரியவராக உள்ளவர் சிறிசாந்த் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரி 20 போட்டி ஞாயிறன்று சச்சின், நிட்னியை கௌரவிக்க


(டர்பன்)

இந்திய நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் மற்றும் தென்னாபிரிக்க அணியின் ஓய்வு பெற்ற பந்து வீச்சாளர் நிட்னி இருவரையும் கௌரவிக்கும் வகையில் இந்திய தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே ரி-20 போட்டியொன்று நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தென்னாபிரிக்காவின் டர்பன் மோசஸ் மபிதா மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியை பார்வையிடுவதற்கான டிக்கெட்டுக்கள் அனைத்தும் விற்பனை செய்யப்பட்டுவிட்டதாகத் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் போட்டியைக் கண்டுகளிப்பதற்காக தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் ஸீமா, இந்தி நடிகர் ஷாருக்கான், உட்பட பல பிரபலங்கள் வரவுள்ளதாகவும் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைத் தகவல்கள் தெரிவித்தன.

# ஆஷஸ் தொடரைக் கைப்பற்றும் முனைப்பில் இங்கிலாந்து அணி



(சிட்னி)

சிட்னியில் இடம்பெற்று வரும் இங்கிலாந்து அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்தாவதும், இறுதியுமான ஆஷஸ் டெஸ்ட்போட்டியின் நான்காம் நாளான நேற்று ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை, அவுஸ்ரேலிய அணி 7 விக்கட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தவிர்ப்பதற்குப் போராடி வருகின்றது.

மூன்றாம் நாள் நிறைவில் இங்கிலாந்து அணி 7 விக்கட்டுக்களை இழந்து 488 ஓட்டங்களைப் பெற்றிருந்தது நேற்று ஆட்டம் தொடங்கிய வேளை, பிறியரின் சதம், மற்றும் ஏனைய இரண்டு வீரர்களின் ஓட்ட விகிதங்களினால் இங்கிலாந்து அணி 644 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் பிறியர் 118, பிரெஸ்னன் 35, சுவான் 36 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில், ஜோன்சன் மொத்தமாக 4, கில்பெங்கஸ் 3, சிடில், வட்சன், பியர் முறையே தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

365 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த அவுஸ்ரேலிய அணியின் விக்கெட்டுக்கள் இங்கிலாந்து பந்து வீச்சாளர்களால் வீழ்த்தப்பட்டன. நேற்றைய ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணியின் எந்தவொரு வீரரும் அரைச் சதத்தை எட்டவில்லை.

அவுஸ்ரேலிய அணி சார்பில் வட்சன் 38, ஹக்ஸீ 13, ஹவாஜா 21, அணித்தலைவர் கிளார்க் 41, ஹசி 12, ஹடின் 30 ஓட்டங்களைப் பெற்றனர். சிமித் 24, சிடில் 17 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில், அன்டர்சன், ட்ரெமெலெட், பிரஸ்னன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இன்று ஆட்டத்தின் இறுதி நாள் என்பதால், இங்கிலாந்து மூன்று விக்கட்டுக்களையும் வீழ்த்தி ஆஷஸ் தொடரை 3 - 1 என கைப்பற்றுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஆட்டமிழக்கச் செய்வது கடினமான காரியமாகும்

(கேப்டவுண்)



உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கரை போட்டிகளின் போது ஆட்டமிழக்கச் செய்வது கடினமென தென்னாபிரிக்க பந்து வீச்சாளரான ஸ்ரெயின் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

டெண்டுல்கர் ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரர், அவரை எளிதில் ஆட்டமிழக்கச் செய்வதென்றால் கடுமையாகப் போராடவேண்டும். மிகவும் அபாரமான பந்துவீச்சின் மூலமே அவரை ஆட்டமிழக்கச் செய்ய முடியும்.

எனது பந்து வீச்சு மிகவும் திருப்தியை அளிக்காது. எப்பொழுதும் விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவதால் மகிழ்ச்சி அளிக்கின்றது. இந்தியாவுடனான போட்டியில் காயத்தால் கலிஸ் பந்து வீசமுடியாததால் எமது பந்து வீச்சாளர்களின் பணி அதிகமாகிவிட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

# நாமல் ராஜபக்ஷ வெற்றிக்கிண்ண சுற்றுப் போட்டிகளின் முடிவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள், கழகங்கள் இராணுவப் பிரிவினருக்கிடையிலான நாமல் ராஜபக்ஷவின் வெற்றிக்கிண்ணச் சுற்றுப் போட்டி கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டிகள் 571 ஆவது இராணுவ படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கிரிக்கெட் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டது.

இதில் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் 1ஆம் இடத்தை, கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயமும், 2ஆம் இடத்தை கிளி/இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும்,

ஆண்களுக்கான உதைபந்தாட்டத்தில் 1ஆம் இடத்தை கிளி/கனகபுரம் மகாவித்தியாலயமும், 2ஆம் இடத்தை கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயமும்,

கிரிக்கெட் போட்டியில் 1ஆம் இடத்தை கிளிநொச்சி மத்திய கல்லூரியும் 2ஆம் இடத்தை கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

இவர்களுக்கான பரிசில்களை நாடாளுமன்ற உறுப்பினர்நாமல் ராஜபக்ஷ மற்றும் இராணுவத்தளபதிகள் வழங்கிக் கௌரவித்தனர். (12)

# சச்சினுக்குப் பின் கலிஸ்

(கேப்டவுண்)




டெண்டுல்கருக்குப் பின்னர் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்றால் அது கலிஸ் தான் என இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

டெண்டுல்கருக்குப் பின்னர் உலகில் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்றால் அது கலிஸ்தான். அவருக்குப் பந்து வீசுவது மிகவும் சவாலானது. நான் பலமுறை அவரது விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளேன். ஆனால் இந்தத் தொடரில் அவரது விக்கெட்டைக் கைப்பற்ற முடியாமற்போனது கவலைதான் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒரு விக்கெட் இழப்பிற்கு 53

(கேப்டவுண்)



இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே கேப்டவுனில் நடைபெற்று வரும் மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இறுதி நாளான நேற்று மதிய உணவு இடைவேளைவரை இந்திய அணி ஒரு விக்கெட்டை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது.

தென்னாபிரிக்க அணி தனது இரண்டாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 341 ஓட்டங்களைப் பெற்றதுடன், இந்திய அணி வெற்றி பெறுவதற்கு 339 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்திருந்தது. இதனையடுத்து நேற்று தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி விரைவாகவே ஷேவாக்கின் விக்கெட்டை இழந்தது. அவர் 11 ஓட்டங்களுடன் வெளியேறினார். நேற்று மதிய இடைவேளை வரை கம்பீர், 32 ராவிட் 8 ஓட்டங்களைப் பெற்று களத்தில் உள்ளனர்.

# ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் இந்தியா; கருத்து எதனையும் வெளியிடாத சீனா

(பீஜிங்)

ஐ.நா.வின் பாதுகாப்புக் குழுவைச் சீரமைத்து விரிவாக்க வேண்டும் என இந்தியா, ஜேர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்த மாற்றங்களை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் கொண்டு வரவேண்டும் என்றும் இவை கூறிவருகின்றன.

ஆனால், இது தொடர்பாக சீன அரசின் கருத்தை வெளியிடும் அதிகார பூர்வமான நாளிதழ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், ஐ.நா.வில் சீர்திருத்தங்கள் ஒரே இரவில் ஏற்பட்டு விடாது. அவை சில ஆண்டுகளிலும் ஏற்படாது.

செயற்கையாக ஒரு காலக்கெடுவை ஏற்படுத்திக் கொள்வதால், எந்தப் பயனுமில்லை. ஐ.நா.வில் சிக்கல் நிறைந்த விஷயங்களைத் தீர்க்க நிறையக் கால அவகாசமும், பொறுமையும் தேவை என்று கூறப்பட்டுள்ளது.

சிறிய, நடுத்தர அளவு நாடுகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் ஆபிரிக்க நாடுகளுக்கும் பாதுகாப்புக் குழுவில் இடமளிக்க வேணடும் என்றும் அந்த நாளிதழ் கூறியுள்ளது.


ஆனால், இந்தியா பாதுகாப்புக்குழுவில் அங்கம் வகிப்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்பட்வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.நா. பாதுகாப்புக்குழுவில் இப்போது அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், சீனா ஆகிய 5 நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கொல்லப்பட்டார் பஞ்சாப் ஆளுநர்; கைதானார் பரிசு அறிவித்தவர்





(இஸ்லாமாபாத்) பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாண ஆளுநர் சல்மான் தஸீரை கொல்பவருக்கு பரிசு வழங்கப்படும் என்று அறிவித்த நபர் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார். பாகிஸ்தான் - பஞ்சாப் மாகாண ஆளுநரான சல்மான் தஸ ர், நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்திலுள்ள வணிக வளாகம் ஒன்றுக்கு வந்தபோது, அவரது பாதுகாவலர் ஒருவராலேயே சுட்டுக்கொல்லப்பட்டார்.

இஸ்லாம் மதத்தை அவமதித்து பேசுபவர்களுக்கு மரண தண்டனை அளிக்கும் சட்டத்திற்கு எதிராக கருத்துத் தெரிவித்ததாலேயே அவர் கொல்லப்பட்டதாகப் கூறப்படுகிறது.

முன்னதாக, பாகிஸ்தானின் முல்டான் பகுதியைச் சேர்ந்த ஈபாத் போஹார் என்பவர், கடந்த வெள்ளிக்கிழமையன்று சல்மான் தஸீரைக் கொல்பவருக்கு 2 கோடி ரூபா பரிசு வழங்கப்படும் என்று அறிவித்திருந்ததாகவும் இந்நிலையில், தஸீர் சுட்டுக கொல்லப்பட்டதைத் தொடர்ந்து காவல் துறையினர் அவரை உடனடியாகக் கைது செய்து, ரகசிய இடத்திற்குக் கொண்டு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தஸீரைச் சுட்டுக்கொன்ற அவரது மெய்ப்பாதுகாவலரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, சுட்டுக்கொல்லப்பட்ட பஞ்சாப் மாகாண ஆளுநர் சல்மான் தஸீரின் உடல் நேற்று பலத்த பாதுகாபபுக்கிடையே அடக்கம் செய்யப் பட்டது. சல்மான் தஸீர் மறைவுக்கு பாகிஸ்தான் அரசு மூன்று நாள் துக்கம் அறிவித்துள்ளது.

# மறைந்த ஈரான் மன்னன் மகன் அமெரிக்காவில் தற்கொலை

(வொஷிங்டன்)

மறைந்த ஈரான் மன்னர் ஜாவின் இளைய மகன் இளவரசர் அலி ரெசா பஹ்லவி அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் உள்ள தனது வீட்டில் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.


அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் வசித்து வந்த 44 வயதான அலி-ரெசா பஹ்லவி நேற்று முன்தினம் காலை தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக அவரது மூத்த சகோதரர் அமெரிக்க இணைய தளம் ஒன்றின் மூலம் செய்தி வெளியிட்டுள்ளார்.

1966 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி தெஹ்ரானில் பிறந்த இளவரசர் அலி - 1979 ஆம் ஆண்டு நடந்த ஈரான் புரட்சிக்குப் பின் தனது குடும்பத்தினருடன் அமெரிக்காவில் குடியேறினார்.

கடந்த 1984 ஆம் ஆண்டு பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் பி.ஏ. பட்டமும், 1992 ஆம் ஆண்டில் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றார். பின்னர் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் பி.எச்.டி படித்துக் கொண்ருந்தார். தற்கொலைக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

# மலேசியாவில் எழுந்த பாடநூல் சிக்கல்கள்

(கோலாலம்பூர்)




மலேசிய வரலாறு பற்றிய அந்நாட்டின் தேசிய விருது பெற்ற எழுத்தாளரால் மாணவர்களுக்காக எழுதப்பட்டு இந்த ஆண்டில் பள்ளி மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இண்டர்லோக் எனும் இலக்கியப் பாடநூலில் இந்தியர்களை இழிவுபடுத்துவதாக சர்ச்சைகள் எழுந்துள்ளன.

குறிப்பிட்ட பாடத்தை உடனே தடை செய்ய அல்லது அதிலுள்ள சர்ச்சைக்குரிய சொற்தொடர்களை அகற்றுமாறு இந்திய அரசியல் தலைவர்கள் கோரிககை விடுத்துள்ளதாக மலேசிய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மலேஷிய வரலாறு பற்றிய ஒரு புதிய பாடத்தை அந்நாட்டின் மாணவர்கள் கட்டாயமாக எடுத்து, படித்து தேர்ச்சி பெறவேண்டும் என்று வலியுறுத்தும் புதிய அரசாங்க விதி ஒன்று அந்நாட்டில் அமுலுக்கு வருவதாகவும் இது மலாய் மக்களின் மேலாதிக்கத்தை அதிகப்படுத்தும் அரசாங்கத்தின் ஒரு முயற்சியே எனவும் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

எனினும், இவற்றை மறுத்துள்ள் மலேசியாவின் கல்வி அமைச்சர் வரலாற்றுப் பாடத்தில் உளள தகவல்களின் தரத்தை மேம்படுத்தவே தமது அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அது பற்றி ஆராய விசேட நிபுணர் குழு ஒன்று அமைக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# கர்ப்பமடைந்துள்ள முதல் பெண்மணி

(வொஷிங்டன்)

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் மனைவி மிச்சேல் மீண்டும் கர்ப்பமாக இருப்பதாக அமெரிக்க பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. மிச்சேல் 2 மாத கர்ப்பமாக இருக்கிறார் எனவும், அவருக்கு இந்த ஆண்டு யூலை இறுதியில் குழந்தை பிறக்கும் என்றும் குறிப்பிடப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ரொபட் சிங்கிடம் கேட்டதற்கு இந்தத் தகவலை உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ இல்லை என்றும் அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

ஒபாமா-மிச்சேல தம்பதிகளுக்கு மலியா (வயது 11), ஜாரா (9) ஆகிய 2 பெண் குழந்தைகள் உள்ளனர்.

ஏற்கனவே கனடா நாட்டைச் சேர்ந்த பெண் ஜோதிடரான நிக்கி 2011 ஆம் ஆண்டில் மிச்சேல் இரட்டைக் குழந்தைக்கு தாயாவார் என்று கூறி இருந்தது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் ஜனாதிபதியாக இருந்தபோது குழநதை பெற்றவர் என்ற பெருமை ஜோன் கென்னடிக்குண்டு. அவர் ஜனாதிபதியாக. இருந்தபோது அவருடைய மனைவி ஜாக்குலினுக்கு 1963 ஆகஸ்டு மாதம் 7 ஆம் திகதி ஆண் குழந்தை பிறந்தது. குறை மாதத்தில் பிறந்த இந்தக் குழந்தை பிறந்த 2 நாளிலேயே இறந்து விட்டது. ஒபாமாவை அமெரிக்கர்கள் அடிக்கடி கென்னடியுடன் ஒப்பிட்டுப் பேசுவது குறிப்பிடத்தக்கது

# இஸ்ரவேலின் உளவுக் கழுகு



(றியாட் )

இஸ்ரவேலின் மொஸாட் புலனாய்வுத் துறையினரால் உளவு பார்கக அனுப்பப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் கழுகு ஒன்று சவூதி அரேபியாவில் பிடிபட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

சவூதி அரேபியாவின் பின்தங்கிய பகுதி ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் கழுகின் கால்களில் டிரான்ஸ்மிட்டர் எனப்படும் ஒலி அனுப்பும் கருவி ஒன்று கட்டப்பட்டிருந்ததாகவும், அதில் இஸ்ரேலின் பிரபல "டெல் அவிவ்" பல்கலைக் கழகத்தின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் சவூதி பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தக் கழுகின் கழுத்தில் இலக்கத்தகடு ஒன்றும் காணப்பட்டுள்ளது.

இதை மறுத்துள்ள இஸ்ரேலிய அதிகாரிகள் இப்பறவை இடப்பெயர்ச்சி தொடர்பான ஆராய்சிகளுக்காகவே அனுப்பப்பட்டிருந்ததாக தெரிவித்துள்ளனர்.

## வெள்ளி விருந்து

# பிரார்த்தனை ஒன்று தான் பிராணனுக்கு ஆதாரம்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபாடியற்றுவது எமது சைவ சமயம். ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ் சோதியான சிவபெருமான் தம்மை வழிபடும் அடியார்களுக்கு ஆன்ம ஈடேற்றம் அருளுகின்றார்.

இந்த மனிதப் பிறவி எமக்குக் கிடைத்தது நாம் சிவனை வணங்கி வாழ்த்தி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.அந்தவகையில் 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்ற முதுதமிழ் மூதாட்டி ஔவையார் கூற்றுக் கிணங்க இந்தப் புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவியை நன்னெறிப்படுத்தி நல்லபடி வாழ முயற்சி எடுக்க வேண்டும்.

'இப்படித்தான் வாழ வேண்டும்' என்று நம்முன்னோர் வாழ்ந்து காட்டிப்போயிருக்கின்றனர். அவர்களுடைய வழிகாட்டலிலேயே நாம் நம்முடைய வாழ்க்கை வண்டியைச் செலுத்த வேண்டும். அதுவே நன்மை பயக்க வல்லது.

எமது மனித வாழ்க்கை நல்லெண்ணத்துடன் நன்னெறியிலே சன்மார்க்கமாக இருக்க வேண்டுமானால் எமக்கு இறை சிந்தனை இருத்தல் வேண்டும். "கடவுளே! எனது வாழ்க்கையில் நேர்மையும் நீதியும் உண்மையும் நியாயமும் இருக்க வேண்டும். நான் தீயவழியிற் செல்லாமல் நல்ல வழிப்படி வாழ அருள்புரிய வேண்டும்" என்று பிரார்த்தனை செய்ய வேண்டும்.

நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலிலும் உண்மையும் நேர்மையும் பொதிந்திருக்க வேண்டும். மற்றவர் மனம் புண்படும்படி பேசக்கூடாது. எந்த நேரமும் இன்முகத்துடன் இனியவார்த்தை பேசி கவலையிலிருப்பவர்களையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்த வேண்டும். முகமலர்ச்சியுடன் சந்தோஷம் மேலிட ஒவ்வொருவருடனும் அளவளாவிப் பாருங்கள். உங்களுக்கு உண்மை விளங்கும் ஆகவே கனியிருக்கக் காய் கவராமல் இனிது வாழ நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.

# பல இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தி.மு.க அரசின் சாதனை என்கிறார் கருணாநிதி



(சென்னை)

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பின் இதுவரை அரசின் பல்வேறு துறைகளில் 5 லட்சத்து 5 ஆயிரம் பேருக்கு மேல் நிரந்தரப் பணிகளில் வேலைவாய்ப்பு அளித்துள்ளோம் என முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்தார்.

படித்து, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பயிற்சியும், பணி நியமனமும் பெறுவதற்கான ஆணை வழங்கும் விழா சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி முதலமைச்சர் கருணாநிதி பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலக இளைஞர்கள் ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டில், படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து, வேலைவாய்ப்பும் அளிக்கும் திட்டம் தொடங்கப்படும் என்று கடந்த சுதந்திர தின விழாவின்போது அறிவித்தேன். இதற்காக ரூ.50 கோடி நிதியும் ஒதுக்கப்பட்டது.

இதுவரை தமிழகத்தின் 6 மாவட்டங்களில் இதற்கான முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் கலந்துகொண்ட 49,495 இளைஞர்களில் 17,600 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் மேலும் 7 மாவட்டங்களில் இந்த வேலை வாய்ப்பு முகாம் நடத்தப்படவுள்ளது.

படித்து, வேலையில்லாமல் தவிக்கும் இளைஞர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கப்படும் என 2006 சட்டப் பேரவைத் தேர்தலின் போது வாக்குறுதி அளித்தோம். சொன்னது போலவே இதுவரை 4 லட்சத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு ரூ.284 கோடி உதவித் தொகையாக வழங்கியுள்ளோம்.

அதேபோல், கடந்த ஆட்சிக் காலத்தில் அமுல்படுத்தப்பட்டிருந்த வேலை நியமனத் தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு, ஆட்சிக்கு வந்தால் வேலைவாய்ப்பு அளிப்போம் எனக் கூறியிருந்தோம். தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பின் இதுவரை அரசின் பல்வேறு துறைகளில் 5 லட்சத்து 5 ஆயிரம் பேருக்கு மேல் நிரந்தரப் பணிகளில் வேலைவாய்ப்பு அளித்துள்ளோம்.

இதுதவிர அமைச்சர்களோடும், மாவட்ட ஆட்சியர்களுடனும் இணைந்து கவிஞர் கனிமொழி மாவட்டம்தோறும் நடாத்தி வரும் வேலைவாய்ப்பு முகாம்களில் இதுவரை 2 லட்சத்து 33 ஆயிரம் பேருக்கும் மேல் கலந்துகொண்டுள்ளனர். அவர்களில் 1 லட்சத்து 33 ஆயிரம் பேர் பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்காக தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பம் இடும் முன், அந்தந்தப் பகுதி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன்தான் நான் கையொப்பம் இடுகிறேன். தமிழகத்தின் பல பகுதிகள் முன்னேறியுள்ளன. இன்னும் பல பகுதிகள் முன்னேற வேண்டியுள்ளன. அதற்கு இளைஞர்களைத்தான் நம்பியுள்ளேன் என்று அங்கே உரையாற்றுகையில் கருணாநிதி மேலும் கூறினார்.

## விலை உயர்வைக் கட்டுப்படுத்த மந்திரக்கோல் அரசிடம் இல்லை

(புதுடெல்கி)

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் மந்திரக்கோல் எதுவும் மத்திய அரசிடம் இல்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார்.

டெல்லியில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசிய அவர், விலைவாசி உயர்வுக்குக் கவலை தெரிவித்தார்.

நாட்டின் மோசமான விளைவை பணவீக்கம் ஏற்படுத்தும் எனவும், அதனைக் கட்டுக்குள் வைத்திருப்பது மத்திய அரசின் கடமை என்றும் அதை நிச்சயம் நிறைவேற்றுவோம் என்றும் சிதம்பரம் உறுதி அளித்தார்.




## இன்று நடைபெறவுள்ள அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் 86 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழாவில் சிவத்தமிழ் விருது பெறும் அறிஞர்கள்



இணுவில் முதுபெரும் புலவர் க.சிற்றம்பலம் (இளைப்பாறிய ஆசிரியர்)



குரு பக்த சிரோன்மணி சமயப் பெரியார் திரு.கே.கே. சுப்பிரமணியம் (காரைநகர்)



திருத்தொண்டர் மாமணி திரு.தம்பியப்பா கைலாயபிள்ளை (அக்கரைப்பற்று)



இசைக்கலைமாணி சங்கீதபூஷணம் திருமதி. தர்மபூவதி சிதம்பரநாதன் அம்மையார்



பண்டிதை பொன் பாக்கியம அம்மையார் (சுழிபுரம்.)

## சென்னை சங்கமம் கிளம்புகிறது எதிர்ப்பு




(சென்னை)

ஸ்பெக்ட்ரம் ஊழலில் தொடர்புடைய தமிழ் மையத்துடன் இணைந்து தமிழக அரசின் சுற்றுலாத்துறை சங்கமம் நிகழ்ச்சியை நடத்தக் கூடாது என்றும் அப்படி மீறி நடத்தினால் புதிய தமிழகம் கட்சி எதிர் போராட்டங்களை நடத்தும் என்றும் அக்கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகையே உலுக்கி வருகிறது.

இந்திய மக்களுக்கும், தமிழர்களுக்கும் உலகளவில் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ள ஸ்பெக்ட்ரம் ஊழலில் சம்பந்தப்பட்ட முன்னாள் அமைச்சர் ராசாவுடன் தொடர்புடையவர்கள் அனைவரும் சி.பி.ஐ விசாரணையில் உள்ளனர்.

அதில் தமிழ் மையம் அமைப்பின் முக்கியஸ்தர்களான பாதிரியார் ஜெகத் கஸ்பர், கவிஞர் கனிமொழி ஆகியோரும் அடங்குவர். இந்த நிலையில் தமிழ் மையம் அமைப்புடன் இணைந்து தமிழக அரசின் சுற்றுலாத்துறை எப்படி சங்கமம் நிகழ்ச்சியை நடாத்த முடியும் எனவும் கிருஷ்ணசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ் மையம் அமைப்பு கிராமியக் கலையையும் அந்தக் கலைஞர்களையும் ஊக்குவிக்கும் வகையில் கடந்த மூன்றாண்டுகளாக சென்னை சங்கமம் என்ற நிகழ்ச்சியை சென்னையில் பொங்கல் தினங்களில் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## தன்னாட்சி அதிகாரம் வழங்கும் திட்டம் கைவிடக் கோருகின்றனர் மருத்துவர்கள்

(சென்னை)

அரசு பொது மருத்துவமனைக்கு தன்னாட்சி அதிகாரம் வழங்கும் திட்டத்தை கைவிடுமாறு சமூக சமத்துவத்திற்கான மருத்துவர்கள் சங்கம் தமிழக அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து இச்சங்கத்தின் பொதுச் செயலர் டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத் விடுத்துள்ள செய்தி வருமாறு -

சென்னை அரசு பொது மருத்துவமனையின் சேவையைத் தனியார் மயமாக்கிடவும், நோயாளிகளிடம் கட்டணம் வசூலித்திடவும், அந்த வருமானத்தைக் கொண்டு மருத்துவமனையை நடத்திடவும் வசதியாக அம்மருத்துவமனைக்குத் தன்னாட்சி அதிகாரம் வழங்கிட தமிழக அரசு முயன்று வருகிறது.

இதுபோன்று இதர மருத்துவமனைகளுக்கும் தன்னாட்சி வழங்கப்படும் எனத் தமிழக சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. அரசு மருத்துவமனைகளை ஒட்டுமொத்தமாக தனியார் மயமாக்கும் இந்த முயற்சியால் ஏழை எளிய நோயாளிகள் பாதிக்கப்படுவர்.

ஏழை மக்களுக்கு இலவசமாக சிகிச்சையளிக்க வேண்டிய தனது பொறுப்பை தட்டிக்கழிக்க தமிழக அரசு முயல்வது சரியல்ல.

ஏற்கனவே கலைஞர் காப்பீட்டுத் திட்டம் மூலம் ரூ.2,100 கோடியை தனியாருக்கு வழங்கி மூன்றாம் நிலை மருத்துவத்தை தமிழக அரசு தனியார் மயமாக்கி வியாபாரமாக்கிவிட்டது. அரசு மருத்துவமனைகளில் கட்டண வார்டுகளை உருவாக்கி மக்களை வஞ்சிக்கிறது. 108 ஆம்புலன்ஸ் சேவையை தனியார் மயமாக்கி ஏராளமானோரின் அரசு வேலை வாய்ப்பைப் பறித்துவிட்டது.

இந்நிலையில் அரசு மருத்துவமனைகளுக்கு தன்னாட்சி அதிகாரம் வழங்கினால் ஏராளமானோருக்கு கிடைக்க வேண்டிய அரசு வேலை வாய்ப்பு பறிபோய்விடும். நிரந்தர ஊழியர்களின் உரிமையும் பாதிக்கப்படும். எனவே அரசு மருத்துவமனைகளுக்கு தன்னாட்சி வழங்கும் திட்டத்தை தமிழக அரசு முழுமையாகக் கைவிட வேண்டும் என சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் கேட்டுக்கொள்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்மாடியிடம் சி.பி.ஐ. விசாரணை



(சென்னை)

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி ஏற்பாடுகளில் நடைபெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக அதன் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் சுரேஷ் கல்மாடியிடம் சி.பி.ஐ 8 மணிநேரம் தீவிர விசாரணை நடத்தியது.

ஒலிம்பிக்தீபம் போன்று கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் துவங்குவதற்கு முன் நடைபெறும் பேட்டன் ரிலே எனப்படும் நிகழ்ச்சிக்கான ஒப்பந்தம் லண்டனைச் சேர்ந்த ஏ.எம். ஃபிலிம்ஸ் மற்றும் ஏ.எம். கார்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டதில் பல நூறு கோடி ரூபாய்களுக்கு முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக சி.பி.ஐ கண்டறிந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இவ்விரு நிறுவனங்கள் மீதும் வழக்குப் பதிவு செய்துள்ள சி.பி.ஐ, சுரேஷ் கல்மாடியிடம் புதன்கிழமையன்று நடைபெற்ற விசாரணையின் போது இது குறித்துக் கேட்டதாக சி.பி.ஐ வட்டாரத் தகவல்கள் கூறுகினறன.

சி.பி.ஐ.யின் தலைமையகத்தில் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு விசாரணை தொடங்கியது. மாலை 6.45 மணிக்கு சி.பி.ஐ அலுவலகத்தில் இருந்து வெளியே வந்த கல்மாடி ஊடகவியலாளர்களைத் தவிர்த்து விட்டு புறப்பட்டுச் சென்றார்.

## புதுப்பொலிவு பெறும் தாஜ்மகால் பயன்படுத்தப்படும் முகப்பூச்சுக்கள்

(ஆக்ரா)

பெண்கள் தங்கள் அழகிற்காக பயன்படுத்தும் முகப் பூச்சுக்கலவையைப் பயன்படுத்துவதன் மூலம், உலகப் புகழ் பெற்ற காதலின் சின்னமான தாஜ்மகாலின் அழகினை மேலும் அதிகப்படுத்தலாம் என்று தகவல் வெளிவந்துள்ளது.

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலின் அழகினைக் காண அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதால் தாஜ்மகாலில் உள்ள பளிங்குக் கற்களின் பளபளப்பு மங்கி வருவதாக பல ஆராய்ச்சியாளர்களும் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், தாஜ்மகாலில் படிந்துள்ள கறை மற்றும் அழுக்குகளை நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தொல்லியல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், தாஜ்மகாலின் பளபளப்பிற்காக பெண்கள் தங்கள் முக அழகிற்குப் பயன்படுத்தும் முல்தானிமிட்டி என்ற பூச்சுக் கலவையை பயன்படுத்தலாம் என்று முடிவு செய்திருப்பதாகவும், இவை மிகச் சிறந்த பலனைத் தரும் என்ற நம்பிக்கை அதிகம் உள்ளதாகவும் அவர்கள் கூறினர். தாஜ்மகாலின் இந்த அழகுபடுத்தும் பராமரிப்புப் பணிகள், வரும் ஏப்ரல் மாதம் முதல் துவங்க உள்ளதாகத் தெரவிக்கப்படுகிறது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# இராமநாதன் நுண்கலைக் கழகம்
# பல்கலைக்கழக அனுமதி – 2010/2011

## உளச்சார்பு பரீட்சை (Aptitude Test)

## நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்

மேற்படி நான்கு வருட பட்டப்படிப்புக் கற்கை நெறிகளுக்கு அனுமதிபெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 31.01.2011 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நிபந்தனைகள்**

**அனுமதிக்கான தகைமைகள்:**

சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பத்தாரிகள் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் தெரிவு செய்ய விரும்பும் பட்ட பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது சங்கீதம், கர்நாடகம் அல்லது நடனம்-பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியும் (C) மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதாரணதரச் சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

**தகுதிகாண் பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை உள்ளடங்கிய தகுதிகாண் பரீட்சைக்கு (Aptitude Test) யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தில் தோற்றுதல் வேண்டும்.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பதாரிகள் கீழேகொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை A/4 தாளில் தயாரித்தோ அல்லது யாழ்ப்பாண பல்கலைக்கழ அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணைய தளத்தில் இருந்து பிரதி செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா 150 ஐ ஏதாவது ஒரு மக்கள் வங்கிக்கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை கணக்கு இல.162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டுடன் பாடசாலை அதிபா அல்லது சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தபட்ட க.பொ.த உயர்தரப் பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும அனுப்பப்படல் வேண்டும். பரீட்சை பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரிகள் சுய விலாசம் இடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட 23X10 செ.மீ அளவுள்ள கடித உறையை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆற்றுகை/நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 31.01.2011 ஆம் திகதிக்கு முன்னதாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழம், யாழ்பபாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக் குறைந்த தகைமையைக் கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்றுப் பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத்திகதிக்குள் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

**பதிவாளர்**
**05.01.2011**

(C/352)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# இராமநாதன் நுண்கலைக் கழகம்
# பல்கலைக்கழக அனுமதி – 2010/2011

## நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்
## தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பம் (Aptitude Test)

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர்: (தமிழிலும், ஆங்கிலத்திலும்)
   முதல் எழுத்துக் குறிக்கும் பெயர்:
   தேசிய அடையாள அட்டை இல:
   நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்):
   தொலைபேசி இல: மின்னஞ்சல்:
2. க.பொ.த (உ.த) பரீட்சை பெறுபேறு -2010:
   சுட்டிலக்கம்: Z புள்ளி: பொதுச் சாதாரண பரீட்சைப் புள்ளி:

| பாடம் | தரம் | மொழி மூலம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

3. பெற்றோர்/பாதுகாவலர் பெயர்: (முகவரி: ஆங்கிலத்தில்)
4. விண்ணப்பிக்கும் பாடநெறி: (தெரிவிற்கு ✓ இடுக) இசை ☐ நடனம் ☐ சித்திரமும் வடிவமைப்பும் ☐
5. சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள்:
   1. பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ☐
   2. உறுதிப்படுத்திய 2010 க.பொ.த (உ.த) பரீட்சை பெறுபேறு சான்றிதழ் (Zபுள்ளி/மாவட்டம் உள்ளடங்கலாக) ☐
   3. பெயர் மாற்றம் செய்யின் அதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம். ☐

என்னால் தரப்பட்ட மேற்படி விபரங்கள் யாவும் சரியென உறுதிப்படுத்துகின்றேன.

................................ ................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

................ ................................ ................................
திகதி பதவி முத்திரை பாடசாலை அதிபர் /சமாதான நீதிவான் கையொப்பம்

(C/352)

# குடாநாட்டிலுள்ள பெருமளவு சங்கங்கள் நட்டத்தில் இயங்குவதாகத் தெரிவிப்பு

(அச்சுவேலி)

யாழ். மாவட்டத்தில் உள்ள ஒரு சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைத் தவிர ஏனைய சங்கங்கள் நட்டத்தில் இயங்கி வருவதாகவும், அச் சங்கங்கள் ஊழியர்களுக்குச் சம்பளங்களைக் கூடக் கொடுக்க முடியாத நிலையில் இருப்பதாகவும கவலை தெரிவிக்கபபடுகின்றது.

நட்டத்தில் இயங்கும் சங்கக் கடைகளில் கடந்த காலங்களில் சங்கச் சொத்துக்களை அடகு வைத்தும் அங்கத்தவர்களின சேமப் பணங்களைச் சட்டத்திற்குப் புறம்பாக உரியவர்களின் அனுமதியின்றியும் வங்கிகளில் இருந்து எடுத்து அச் சங்கங்களை இயக்க முடியாத அளவுக்கு கொண்டுவந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட ஒரு சங்கத்தில் அங்கத்தவர்களின் சேமப்பணத்தில் சுமார் ஒன்றரைக்கோடி ரூபாவிற்கு மேல் அச்சங்க நிர்வாகம் எடுத்துச் செலவு செய்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

சில சங்கங்கள், உணவுப் பொருட்கள் தனிப்பட்ட வர்த்தகர்களுக்கான மொத்த விற்பனையில் மோசடிகள் செய்திருப்பதும் நிவாரணப் பொருட்கள் விநியோகத்தில் மோசடி செய்திருப்பதும மற்றும் வங்கி மோசடிகளும் கூட்டுறவுத் திணைக்களத்தால் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை, உலர் உணவு விநியோகத்தில் கூட்டுறவுத் திணைக்களம், சங்கங்களின் கிளை விற்பனை நிலையங்களை பாவனையாளர்களுக்கு சிரமம் ஏற்படாத வகையில் ஒன்றிணைந்து குறிப்பிட்ட சில கிளைகளில் வைத்து விநியோகிக்கும் கொத்தணி முறையை நடைமுறைப்படுத்துவதால் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை சங்கங்கள் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆசிரிய ஆலோசகர்கள் நியமனம் பெற்றனர்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் கல்விவலயத்தில் கடந்த வருடத்தில் நிலவிவந்த ஆசிரிய ஆலோசகர்களின் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் பல்வேறு பாடத்துறைகளுக்குமாக புதிய ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். புதிதாக நியமனம் பெற்ற இவ் ஆசிரிய ஆலோசகர்கள் கடந்த முதலாம் திகதி தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

விஞ்ஞானம், சுகாதாரமும் உடற்கல்வியும், இரண்டாம் மொழி சிங்களம் உள்ளிட்ட பல்வேறு பாடத்துறைகளில் நிலவிவந்த ஆசிரிய ஆலோசகர் வெற்றிடத்தை நிரப்பும் வகையில் தகுதியானவர்களிடமிருந்து கோரப்பட்ட விண்ணப்பத்திற்கமைய நடாத்தப்பட்ட எழுத்துப்பரீட்சையில் சித்தி எய்தியவர்களே நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்டு இவ்வாறு ஆசிரிய ஆலோசகர்களாகப் புதிதாக நியமனம் பெற்றனர். (03)

# வீதி சேதமடைந்ததால் பேருந்துச் சேவை நிறுத்தம்

(ஊர்காவற்றுறை)

யாழ்ப்பாணம்-ஊர்காவற்றுறை - தம்பாட்டி கிராமம் ஊடான இலக்கம் 777 வழிப்பாதை பேருந்து சேவை நேற்றுமுன் தினம் முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை ஊடான 777 இலக்க பேருநது சேவை இதுவரை காலமும் தம்பாட்டி ஊடான சேவையினை மேற்கொண்டு வந்தது. தற்போது மேற்படி தம்பாட்டி ஊடான சேவையில் ஈடுபடும் வீதி மழையினால் குண்டும்குழியுமாக உள்ளதுடன் பேருந்து பயணிக்க முடியாத நிலையில் காணப்படுவதனைத் தொடர்ந்து நேற்று முன் தினம் முதல் அப்பாதை ஊடான பேருந்துச் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றுக் காலை இவ் வீதியூடாக சேவையில் ஈடுபட்ட வடபிராந்திய போக்குவரத்துச் சபை பேருந்து வீதியினால் போக்குவரத்தினை மேற்கொள்ள முடியாமல் திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மேற்படி வீதி தரமற்றதாக போடப்பட்டமையாலேயே வீதி[illegible]கற்கள், தார்கள் என்பன மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு வீதிப் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்தனர். பேருந்து சேவை நிறுத்தப்பட்டதனால் தம்பாட்டி கிராம மக்கள், பாடசாலை மாணவர்கள் சுமார் 4 கிலோ மீற்றர் தூரம் நடந்தே வைத்தியசாலை, பாடசாலை என்பனவற்றுக்கும் வேறு அரச திணைக்களங்களுக்கும் செல்ல வேண்டிய நிலையில் உள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர். (27)

# "உமைப்போலினி யாருளர்"

**கலாநிதி, அன்னை தங்கம்மா**
**அப்பாப்குட்டியின் பிறந்தநாள் கவிதை.**



அழகு தமிழால் அறமுரைத்தருளி துர்க்கா
ஆலயம் வடிவமைத்த அன்னையே!
மெழுகு மனதால் உலகை வென்ற
முதல்வியே! தமிழன்னையே! வெல்க.

தொழுது வரும் அடியவரை என்றும்
தோற்றிடாமல் தொண்டு செய்யவே,
பழுதிடாத பெருவாழ்வுகந்த 'அப்-
பாக்குட்டி தங்கம்மா' ஓர் அவதாரமே.

முழுவதும் உண்மையாக, முறையாக ஒன்றை
முகாமையுடன் முயன்று முடிப்பவராக
பொழுதெல்லாம் அம்பாளுக்காய் வாழ்வளித்து
பொற்கோயிலாய் பேறளித்த பெருந்தகையே!

வாய் திறந்தால் தமிழ் சொரியும், வையகம்
போய் வந்தால் அறம் பொலியும், சேயாக
தாய் என்றால் கை கொடுக்கும், துரந்தரியே!
தூய உமைப் போலினி யாருளர்! தாயே!

கே.எஸ்.சிவஞானராஜா,
கொக்குவில்.

# இலட்சோபலட்சம் நோயாளிகளுக்கு யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சை

## கடந்த ஆண்டில் மருத்துவ சேவையில் உச்சம்



(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த 2010ஆம் ஆண்டில் மட்டும் மூன்று இலட்சத்து 79 ஆயிரம் பேர் வரையில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்தியசாலையின் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற நோயாளர்கள் ஒரு இலடசத்து 11 ஆயிரத்து 79 பேரும், வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றவர்கள் இரண்டு இலட்சத்து 68 ஆயிரத்து 322 பேரும் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளதாக வைத்தியசாலை புள்ளிவிபரப் பதிவேட்டிலிருந்து தெரியவந்து ள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டை விட 2010ஆம் ஆண்டில் கூடுதலானோர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருப்பதாக அந்தப் புள்ளிவிபரங்கள் தெரிவிப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

காய்ச்சல், தடிமல், தலைவலி, வயிற்றோட்டம் போன்ற நோய்களின் தாக்கங்களினால் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றோரின் எண்ணிக்கை மிக மிக அதிகரித்தே காணப்படுகின்றது.

கடந்த ஆண்டில் வெளிமாவட்டத்தைச் சார்ந்த மக்களில் அதிகமானோரும் இவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

இந்தப் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் கணிப்பிடும் போது மேலும் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை இவ்வாண்டிலும் அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.(18)

## 'ஜோக்' அடித்தார் ஜனாதிபதி வாய்விட்டுச் சிரித்தனர் அமைச்சர்கள்

(கொழும்பு)

பொது இடங்களில் குட்டைப் பாவாடை அணிந்து கொள்வதற்குத் தடை விதிப்பது குறித்து அமைச்சரவையில் அலசி ஆராயப்பட்டிருக்கிறது.

இவ் விடயம் குறித்துக் கடந்த புதன்கிழமை கலாசார அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க அமைச்சரவைக் கூட்டத்தில் பிரஸ்தாபிததார். அதன்போது சிரித்துக்கொண்டே இடையில் குறுக்கிட்ட ஜனாதிபதி பெண்களுக்கான குட்டைப் பாவாடையின் உயரம் தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்று கேள்வி எழுப்பினார். ஜனாதிபதியின் இக் கேள்வியால் அங்கிருந்த அமைச்சர்கள் அனைவரும் தங்களை மறந்த நிலையில் வாய்விட்டுச் சிரித்தனர்.

இச்சிரிப்பொலி சில நிமிடங்கள் வரை நீடித்தது. அமைச்சரவைக் கூட்டமே கலகலப்பாகக் காணப்பட்டது.

## பேராசிரியராக மயில்வாகனம் இரகுநாதன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைப் பேராசிரியராக மயில்வாகனம் இரகுநாதன் உயர்வு பெற்றுள்ளார்.

இவர் ஈழத்து தமிழ் நாவல்கள் என்னும் தலைப்பின் கீழ் சமுதாயச் சிக்கல்கள், நாவல்கள் சில பார்வை, இன உணர்வு மற்றும் தமிழ்ப்பாவடிவங்களை விளங்கிக்கொள்ளல் போன்ற நூல்களை எழுதியதுடன், கோவலன் நாடகத்தினுடைய பதிப்பாசிரியராகவும் இருந்துள்ளார்.

மேலும் ஈழத்து தமிழ்க் கவிதைகளில் சாதியம், பெண், தேசியம் பற்றி எழுதியுள்ளார். தமிழ்ப் பண்பாட்டுத் தடங்கள், வன்னிப் பிரதேச நாவல்கள் ஓர் ஆய்வு, நவீன ஈழத்து இலக்கியம் என்பவற்றிலும் புலமைமிக்கவர் என்பது குறிப்பிடத்தக்கது. (62)

## உயர் பாதுகாப்பு வலயத்தில் திடீரென தீ பரவியது!

(கொழும்பு)

ஜனாதிபதி அலுவலகம் அமைந்துள்ள அதிஉயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கொழும்பு கொம்பனித்தெருப் பகுதியிலுள்ள பயிற்சிக் கல்லூரி ஒன்றிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த பயிற்சிக் கல்லூரியில் லி:ப்டில் ஏற்பட்டுள்ள மின் ஒழுக்கே இந்த தீவிபத்திற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தினால் எவருக்கும் எவ்வித ஆபத்துக்களும் ஏற்படவில்லை. தீயணைப்புப் படை வீரர்கள் தற்போது தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## படகு பழுதாகியது; பயணிகள் அந்தரிப்பு!

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து பிரயாணிகளை ஏற்றிச் சென்ற கூலர் படகொன்று நடுக்கடலில் பழுதாகியதையடுத்து படகில் சென்ற பிரயாணிகள் பயப்பீதியுடன் காணப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று வியாழக் கிழமை பிற்பகல் 5.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு பயப்பீதியுடன் காணப்பட்ட மக்களைக் கண்ணுற்ற நயினாதீவு சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பிரயாணிகள் படகுச் சேவையினர் உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று பிரயாணத்தை மேற்கொண்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு நயினாதீவு இறங்குதுறைக்குக் கொண்டு சென்று அங்கு தங்கவைக்க வைத்துள்ளனர்.

## மின்சாரம் தாக்கி ஊழியர் மயக்கம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மின்சார நிலைய ஊழியர் ஒருவர் மின்சாரத் தாக்குதலிற்கு இலக்கான நிலையில் நேற்று முற்பகல் யாழ். போதனாவைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இ.திவ்வியராஜ் (வயது-23) என்ற மேற்படி ஊழியரே மின்சாரத்தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இணுவில் பகுதியில் நேற்று நண்பகல் 12.00 மணியளவில் மின்னிணைப்பு வேலைகளை மேற்கொண்டிருந்த சமயமே இவரை மின்சாரம் தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

(72, பா)

## ஐந்து உள்ளூராட்சி மன்றங்கள் மாநகர சபைகளாகத் தரமுயர்வு

(கொழும்பு)

அக்கரைப்பற்று உட்பட ஐந்து உள்ளூராட்சி மன்றங்கள் மாநகர சபைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, அம்பாந்தோட்டை, பண்டாரவளை, கடுவெல மற்றும் தம்புளை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களே மாநகர சபைகளாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இத்தரமுயர்த்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த புதன் கிழமை வெளியிடப்பட்டதாகவும், இவ்வாறு தரமுயர்த்தப்பட்ட ஐந்து உள்ளூராட்சி மன்றங்களிலும் மாநகர சபைத் தேர்தலே நடைபெறும் என அமைச்சர் அதாவுல்லா மேலும் கூறினார்.

## பலாங்கொடையில் சிறிய நீர்மின் சக்தி திட்டம்

(கொழும்பு)

லாவ் காஸ் நிறுவனம் சிறிய நீர்மின் சக்தி செயற்திட்டத்திற்கென 500 மில்லியன் முதலீடு செய்வதற்கு முன்வந்துள்ளது. இந்த முதலீட்டினைக் கொண்டு பலாங்கொடை இம்புல்பா பிரதேச சபை பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சிறிய நீர்மின் சக்தி செயற்திட்டத்திற்கான ஆரம்பகட்ட பணிகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## போதைப்பொருள் விற்பனை; ஆயிரத்து 140 பேர் கைது!

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த ஆயிரத்து 140 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை மதுவரித் திணைக்கள அதிகாரி கே. தேவகுமார் வெளியிட்டுள்ளார்.

மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களுள் சட்டவிரோத சாராய விற்பனையில் ஈடுபட்ட 599 பேரும், கள் விற்பனையில் ஈடுபட்ட 386 பேரும், கஞ்சா,பியர்,கசிப்பு உட்பட பல்வேறு போதைப்பொருட்கள் விற்பனையில் ஈடுபட்டவர்களும் அடங்குவதாக அவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன் சிலர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் மதுவரி திணைக்கள அதிகாரி கே. தேவகுமார் தெரிவித்துள்ளார்.

## பசுமாடுகள், பசுப்பால் இறக்குமதி வரி இரத்து

(கொழும்பு)

பசு மாடுகள் மற்றும், பசும்பால் உற்பத்திச் சாதனங்கள் மீதான இறக்குமதி வரி இரத்து செய்யப்பட்டுள்ளது.

அதன் வளர்ச்சித் தன்மையை அதிகரிக்கும் வகையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டாகும் போது, பாலுற்பத்தித் துறையில் இலங்கை தனித்துவத்தை பெற வேண்டும் என்ற இலக்குடன், இந்த வரி இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### மன்னாரில் மூன்று...

தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைவிடப் பேசாலை முருகன் கோவிலடியைச் சேர்ந்த தர்மா என்ற ஆட்டோ சாரதி மன் னார் நகரில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

மன்னார் காட்டாஸ்பத்திரி பகுதியில் வைத்து கடத்தப்பட்ட முஸ்லிம் இளைஞனைக் காப்பாற்றுவதற்காக அந்தப் பகுதியில் இருந்த மக்கள் ஒன்றுதிரண்டு எதிர்ப்பு தெரிவித்து, அவர் கடத்தப்படுவதில் இருந்து தடுக்க முற்பட்டார்கள். அப்போது, அங்கு திரண்டிருந்த பொதுமக்களை அச்சுறுத்து வதற்காக வானத்தை நோக்கி கடத்தல்காரர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்து விட்டு அந்த முஸ்லிம் இளைஞனை வான் ஒன்றில் கடத்திச் செல்லபபட்டுள்ளதாக ஊர்வாசிகள் தெரிவித்துள்ளனர்.

### புகலிடம் கோரும்....

ஐக்கிய நாடுகள் சபை, மேற்படி விடயத்தில் அவுஸ்ரேலிய அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இலங்கை உள்ளிட்ட பல ஆசிய நாடுகளின் அகதிகளை கையாள்வது தொடர்பில் அவுஸ்ரேலிய குடிவரவுத் திணைக்களம் பல்வேறு அழுத்தங்களுக்கு உள்ளாகி இருப்பதாகவும் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவின் குடிவரவுத்துறை அமைச்சில் இடம்பெற்ற இரகசிய சந்திப்பு ஒன்றின்போது, இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சுமார் 92 அகதிகளுடன் நேற்று முன்தினம் படகு ஒன்று கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து, இந்தச் சந்திப்பு இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

இதற்கிடையில் தற்போது ஒரு இலட்சத்து 40 ஆயிரம் விண்ணப்பங்கள் வரையில் அகதி அந்தஸ்து கோரி அவுஸ்ரேலிய குடிவரவு திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன இவை தொடர்பில் துரிதமாக இயங்க முடியாத நெருக்கடி நிலைக்கு அவுஸ்ரேலியா தள்ளப்பட்டுள்ளது.


இவ்வாறான நிலையில், அவுஸ்ரேலியாவின் எதிர்க்கட் சியும் பல்வேறு குற்றச் சுமத்தல்களை அரசு மீது முன்வைத்து வருவதாக அவுஸ்ரேலிய நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

### இளம்பெண்ணைக்...

வண்டி ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸாரின் வாகனத்தைக் கண்டதும் பதட் டமான நிலையில், வந்த பாதை வழியாக திரும்பிச் செல்வதை அவதானித்த பொலிஸார், வாகனத்தை தொடர்ந்து சென்று அதை மறித்துச் சோதனையிட்ட போது, முச்சக்கர வண்டியில் இளம் பெண் ஒருவரும் மற்றும் மூவரும் இருந்துள்ளனர்.


இதனைத் தொடர்ந்து விசா ரணையை மேற்கொண்ட போது, குறித்த பெண் பலாத்காரமான முறையில் வீட்டில் இருந்து கடத்தப்பட்ட விடயம் தெரிய வந்தது. தொடர்ந்து முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களை பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் அவர்களை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

தொடர்ந்து சந்தேகநபர்களை இரண்டு வார காலத்திற்கு விளக்கமறியலில் வைக்கும் படியும், குறித்த பெண்ணை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தும்படியும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.



# புலிகளிடம் எஞ்சியுள்ள கப்பல்கள் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுகின்றன

## நாடாளுமன்றில் தினேஸ் குணவர்த்தன



புலிகளிடம் தற்போது இன்னமும் 8 கப்பல்கள் இருப்பதாகவும் மனிதக் கடத்தல்கள் உட்பட பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு அவை பயன்படுத்தப்படுவதாகவும் அரசாங்கம் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில், அரசாங்கத் தரப்பு பிரதம கொறடாவான தினேஸ் குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் புலிகள் அழிக்கப்பட்ட போதிலும் அதன் சர்வதேச வலையமைப்பு இன்னும் பாதிக்கப்படாமல் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

புலிகளிடம் 20 கப்பல்கள் இருந்தபோதிலும் அவற்றில் எதுவும் அவ்வமைப்பின் பெயரில் பதிவு செய்யப்படவில்லை எனவும் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

அண்மையில் கனடாவுக்கு இலங்கையர்களை கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட 'ஈஸ்வரி' எனும் கப்பலும் அவற்றில் ஒன்றாகும்" எனவும் அவர் தெரிவித்தார்.

# கவலையை விடுங்கள்... விசேட திறமையிருந்தால் பல்கலைக்கழக அனுமதி

## உயர்கல்வி அமைச்சு அறிவிப்பு



(கொழும்பு)

அதி விசேட திறமைகளை வெளிப்படுத்துகின்ற மாணவர்களை பல்கலைக்கழகங்களில் இணைத்துக்கொள்ளும் நடைமுறை இந்த வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறையின்கீழ் பல்கலைக்கழகங்களுக்கு அனு மதி பெற, கல்விப் பொதுத்தராதர உயர்தரம் மாணவர்களுக்கு ஒரு தடையாக இருக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த ஆண்டு முதல் உயர்தரப் பரீட்சையின் போது, ஆங்கில பாட பரீட்சையில் தோற்றுவது கட்டாயமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு ஆங்கிலம் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உயர் கல்வி நிறுவனங்களை பதிவு செய்வது மற்றும் அதனை வகைப்படுத்து தொடர்பில் புதிய சட்டங்கள் இயற்றப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தோல்வியின் பயம் அரசுக்கு தேர்தல் ஒத்திவைப்புக்கு அதுவே காரணம்

## ஐ.தே.கட்சி அரசு மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தலில் தோல்வி ஏற்படும் என்ற அச்சம் காரணமாகவே அரசு குறிப்பிட்ட சில உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலை ஒத்திவைத்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

தேர்தலில் தோற்றுவிடும் என்ற பயத்தினாலேயே அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக ஐ.தே.க கூறியது.

ஆறு மாதகாலமாக உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முறையில் மாற்றங்களை செய்யப்போவதாக அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கிறது. பின் இதற்கு இன்னும் பல மாதங்கள் எடுக்கு மெனக் கூறியது.

பழைய முறையிலேயே தேர்தல்கள் நடைபெறும் எனவும் கூறியது. ஆனால் இப்போது பல இடங்களில் தேர்தல்களை ஒத்திவைத்துள்ளது என ஐ.தே.க.வின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய கூறியுள்ளார்.

மக்கள், அரசாங்கத்தில் நம்பிக்கை இழந்து விட்டனர். அரசாங்கம் மக்களை ஏமாற்றி விட்டதாக அவர்கள் கூறுகின்றனர். இதனால் அரசாங்கம் இந்த இடங்களில் தேர்தலை நடத்த விரும்பவில்லை.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தாலும் அரசாங்கத்துக்கு மக்களின் ஆதரவு இல்லையென அவர் கூறினார். ஐ.தே.க. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு முகங்கொடுக்கத் தயாராக உள்ளது. இரண்டு கட்சிகள் ஐ.தே.க.வுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தேர்தல் காலத்தில் பொதுச் சொத்துக்களையும் அரச ஊடகங்களையும் துஷ்பிரயோகம் செய்வதை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# தமிழ் இளைஞர் கண்டியில் கைது

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டையின்றி கண்டி நகரில் நடமாடிய தமிழ் இளைஞர் ஒருவர் கண்டி பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டவர் புசல்லாவை பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் அவரிடம் அடையாள அட்டை மற்றும் தன்னை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்கள் இல்லாத தன் காரணமாகவே கைதுசெய்யப்பட்டதாகவும் கண்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் கண்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், அவர் தொடர்பிலான விசாரணை இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# வெள்ளைக் கொடி வழக்கு...

செய்தியாளர் கயான் குடாகம சாட்சியம் அளித்தார்.

இதன் பின்னர், சரத் பொன்சேகா தொடர்பில் ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சி நிறுவனம் நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என அரச பிரதி வழக்கறிஞர் புவனிகா அலுவிகார கேட்டுக் கொண்டார்.

இக் குறித்த காணொளிக் காட்சி அடங்கிய செய்தி அறிக்கை மிகவும் முக்கியமானது எனவும், அதனை தனக்கும் வழக்குரைஞரும் சந்தேகநபர் சார்பில் நீதிமன்றத்தில் சமுகமளித்த சட்டத்தரணி நளின் லத்து ஹெட்டி கேட்டுக்கொண்டார்.

இதன்படி குறித்த காணொளி அடங்கிய செய்தி அறிக்கையை நேற்றைய தினத்துக்குள் சட்டமா அதிபர் திணைக்களத்தில் சமர்ப்பிக்குமாறு தெரண தொலைக்காட்சி நிறுவனத்திற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், அதன் பிரதி ஒன்றை பிரதிவாதி தரப்புக்கும் வழங்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்நிலையில், வெள்ளைக் கொடி விவகார வழக்கு இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இவ் வெள்ளைக் கொடி விவகார வழக்கு கடந்த மாதம் 16 ஆம் திகதியே இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருந்தது. அதன் போது முழுக் காணொளிக் காட்சிகளும் இன்றி சாட்சியம் பெற நீதிமன்றம் அனுமதி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார், முல்லை அரச அதிபர்கள் நேற்று திடீர் இடமாற்றம்

(கொழும்பு)

மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த அரசாங்க அதிபர்கள் நேற்று திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் அரசாங்க அதிபர் ஏ.நீக்கிலாஸ்பிள்ளை பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவருடைய இடத்திற்கு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் திட்டமிடல் பணிப்பாளராகப் பணியாற்றி வந்த ஏ.பத்திநாதன் பதவி உயர்வுடன் முல்லைத்தீவு அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் அரசியல் நோக்கத்துடனேயே இவ் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் சந்தேகிக்கின்றனர்.

# யாழ்.நகரில் தனியார் கல்வி...

தொடர்ந்து அந்த இடத்தை பார்வையிட்ட போதே தீயிடப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது. எனினும், அதற்குள் தீ கொட்டகையிலு பரவி விட்டதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்து யாழ்.மாநகர தீயணைப்புப் படையினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து சுமார் 9.30 மணியளவில் தீயை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

இச்சம்பவம் விஷமிகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப் பட்டதாக யாழ்.பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

எனினும் தீ பரவியதை கண்டறிந்திராவிட்டால் தீ முழுவதுமாக பரவியிருக்கும். அதனோடு நகரப்பகுதியென்பதால் குடிமனைகளும் இப்பகுதியில் மிக நெருக்கமாகக் காணப்படுகின்றன.

இதனால், சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம். இது தொடர்பாக விசாரணைகளை யாழ்.பொலிஸார் மேற் கொண்டுள்ளதுடன், சம்பவம் நடந்த இடத்தை யாழ். நீதிவான் நேரில் சென்று பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகங்களை ஒடுக்க...

முயற்சியாக இதைச் சில சக்திகள் சித்திரிக்கக்கூடும் என அமைச்சர்கள் பலர் சுட்டிக்காட்டினர். ஆயினும் ஜனாதிபதி தொடர்ந்து அமைச்சரவைப் பத்திரத்தை நிராகரித்துள்ளார்.


முழுமையான ஆங்கிலம்
Complete English
ஒவ்வொருவர் அவசியம் இருக்கவேண்டிய புத்தகம்
தினமும் 15 நிமிடம் செலவுசெய்து வீட்டிலிருந்தபடியே தமிழைப்போன்று சரளமாக ஆங்கிலம் பேச முடியும்.
ஒரு புத்தகத்தின் விலை Rs.1100/-
MyWay 182, Stanley Rd, Jaffna

வெற்றித்தேர்வு நாடளாவிய பரீட்சை – 2011
2011 – தரம் : 5, தரம் : 4 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான சாதனைபடைத்த வெற்றித்தேர்வு தொடர் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன.
அகில இலங்கையில் மாணவர்களை முதல் நிலைக்கு கொண்டுவந்த, விசேட அங்கீகாரத்துடன் முதற்தர வினாப்பத்திரமான வெற்றித்தேர்வு தயார் நிலையில். தேவையான பாடசாலைகள் உடன் தொடர்புகொள்க.
பாடசாலைகளுக்கு தரம்: 5 ற்கு 20 பத்திரங்கள் தரம்: 4 ற்கு 15 பத்திரங்கள்
யாழ். மாவட்ட தரம்: 5, தரம்: 4 மாணவர்களுக்கான விசேட பரீட்சை மையம்:
34 பரீட்சைகளோடு திருத்தி புள்ளித்தாள்களுடன் மாணவர் நிலைப்பட்டியலும் வழங்கப்படும்.
முதலாவது பரீட்சை 09.01.2011 ஞாயிறு: 6 am, 8 am, 10am, 2pm, 4pm
இடம்: நல்லூர் சயன்ஸ் அக்கடமி
(C/353) மேலதிக விபரங்களுக்கு : 021 222 9016, 0773126807, 0775388471

யாழ்.மாவட்ட மக்களுக்கு
SEC
ஷாலோம்
SHALOM
உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.
குறிக்க தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...
வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் - மாபிள் - றெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்-
SHALOM வழங்கும் நற்செய்தி...!
SHALOM 20/1, 2வது ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(C/347)
தொலைபேசி : 0217901798 - 0771044861
தீவகத்தில் SHALOM, சிற்பன வீதி, வங்களாவடி, வேலணை.


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.